





# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 49 சோபகிருது வருடம், ஆவணி மாதம் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (29.08.2023) ஹிஜ்ரி 1445, ஸபர் - 12, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50







# அரசியல்வாதிகள் குருந்தூர் மலைக்கு!



## வன்னி எம்.பிக்கள் நேற்று கள விஜயம்

## அதிகாரிகளுடன் நீண்ட ஆராய்வு

முல்லைத்தீவு, குருந்தூர் மலைப் பகுதியில் தொல்பொருள் திணைக்களத்தினால் அபகரிக்கப்பட்ட மக்களின் காணிகள் அமைந்துள்ள பகுதிகளுக்கு அரசியல் பிரமுகர்கள், அதிகாரிகள் நேற்று (28) கள விஜயமொன்றை மேற்கொண்டனர். முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர்... 02 பக்கம்

## வறண்டுபோன 10,000 ஏரிகள்

02பக்கம்

## பெல்மதுளையில் பரவிய காட்டுத் தீ

ஏழு ஏக்கர் வனம் எரிந்து நாசம்

02பக்கம்

கமெண்ட் கந்தர்...



எப்படி பார்த்தாலும் எம்.பி.க்கள் காட்டில் மழைதான் என்னங்கோ..!

## வீடுகளில்லாத எம்.பிக்களுக்கு ஒரு கோடியே 16 இலட்சம் ரூபா

### தேசிய கணக்காய்வு அறிக்கையில் தகவல்

மாதிவெலவில் அமைந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான குடியிருப்புத் தொகுதிகளில் வீடுகள் கிடைக்காத 18 எம்.பிக்களுக்கு ஒரு கோடியே 16 இலட்சம் ரூபா பணம் வழங்கப்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் பிரகாரம், 2021ஆம் ஆண்டில் 10 உறுப்பினர்களுக்கு 67 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் 2022ஆம் ஆண்டில் 08 உறுப்பினர்களுக்கு 48 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்



## அடுத்த உயர் பதவி நாமலுக்கு!

சபாநாயகர் - அநுர, பிரதி சபாநாயகர் - சஜித் ரோஹித பரிந்துரை

02பக்கம்

## தேயிலை உற்பத்தி தெற்கில் வீழ்ச்சி

02பக்கம்

## நீதிமன்றத் தடையை மீறி கொழும்பில் ஆர்ப்பாட்டம்

### யாழிலும் போராட்டம் முன்னெடுப்பு

மொஹமட் நஸார், யாழ். செய்தியாளர்

கொழும்பு கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளுக்கு நுழைவதற்கு அரசியல் பிரமுகர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், சிவில் செயற்பாட்டாளர்கள் ஆகியோருக்கு நீதிமன்றம் நேற்று (28) தடை விதித்திருந்த நிலையில், கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக பாரிய போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

முன்னிலை சோஷலிசக் கட்சியுடன் இணைந்த தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புகள் மற்றும் ஏனைய அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து கொழும்பு கோட்டையில் நடத்தவிருந்த... 02 பக்கம்



யாழ்ப்பாணம், தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தேர்த் திருவிழா பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ நேற்று (28) இடம்பெற்றது. (படப்பிடிப்பு: யாழ். செய்தியாளர்)

## கடும் வறட்சியால் அதிக பாதிப்புகள்

02பக்கம்

## வெல்லம்பிட்டியில் துப்பாக்கிச் சூடு ஒருவர் உயிரிழப்பு

வெல்லம்பிட்டி, கித்தம்பஹூவ பிரதேசத்தில் நேற்று (28) மதியம் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொலைசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. 02 பக்கம்



உஷ்

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க யாழ்ப்பாணத்துக்கான பயணமொன்றை மேற்கொண்டிருந்தார்.

அங்கு கட்சியின் முக்கிய பிரமுகர்களுக்கு தெரியாமல் அவர் மேற்கொண்ட சில இரகசிய சந்திப்புகளால் கட்சியின் உண்மையான விசுவாசிகள் கடும் கொதிப்பில் இருப்பதாக தகவல்.

இதனால் சஜித்துக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து கிடைக்கும் ஆதரவு பின்னடைவை சந்திக்கலாமென சொல்லப்படுகிறது.

## அஸ்வெசும திட்டத்துக்கு 05 பில். ரூபா ஒதுக்கீடு

அரசாங்கத்தின் 'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்துக்காக ஐந்து பில்லியன் ரூபா நிதி அரச வங்கிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு நேற்று (28) தெரிவித்தது.

அதன் பிரகாரம், 08 இலட்சம் பயனாளர்களுக்கு இந்தத் தொகை முதற்கட்டமாக வழங்கப்படுமென நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, இந்தப் புதிய வேலைத்திட்டத்தின் கீழ் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் மக்கள் எதிர்நோக்கியுள்ள தொழில்நுட்ப... 02 பக்கம்

## அரச வாகனங்களின் விபரங்கள் திரட்டல்

### நிதியமைச்சினால் விசேட வேலைத்திட்டம்

அரச நிறுவனங்களில் உள்ள அனைத்து வாகனங்கள் பற்றிய விபரங்களைத் திரட்டுவதற்கு தீர்மானித்துள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது. அமைச்சுகள், திணைக்களங்கள், சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களில் உள்ள வாகனங்கள் தொடர்பில் கணக்கெடுப்பு செய்வதற்கு விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கென நிதியமைச்சினால் புதிதாக... 02 பக்கம்



# பாடசாலை கட்டமைப்புக்குள் போதைப்பொருள் அரக்கன்

### காப்பாற்ற தனி படைப்பிரிவு அவசியமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து





போதைப்பொருள் வியாபாரம் காரணமாக, நம் நாட்டின் குழந்தைகள் மற்றும் பாடசாலை கட்டமைப்பு மிகவும் ஆபத்தானதாக மாறியுள்ளதாகவும் ஈஸி கேஷ் போன்ற முறைகள் மூலம் போதைப்பொருள் அரக்கன் பாடசாலை கட்டமைப்பு மற்றும் பாடசாலை மாணவர்களை விழுங்கிவிட்டதாக நகர்ப்புற மற்றும் கிராமப்புற பாடசாலைகளுக்கு செல்லும்போது பெற்றோர்கள் கூறுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அண்மையில் இடம்பெற்ற சிறுவர்களுக்கான பாராளுமன்றக் குழுக் கூட்டத்தின் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை, பாடசாலை மாணவர்களிடமிருந்து போதைப்பொருளை அகற்றுவதற்கான அவசர வேலைத்திட்டம் அவசியமாக தேவைப்படுகின்றது.

பிள்ளைகளை மையமாகக் கொண்ட போதைப்பொருள் வியாபாரத்துக்கு எதிரான கடுமையான சட்ட கட்டமைப்பு மற்றும் வேலைத்திட்டங்கள் தேவைப்படுகின்றன.

மேலும், பாடசாலை மாணவர்களை பாதுகாப்பதற்கென தனியான படையொன்று உருவாக்கப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அந்தவகையில், நம் நாட்டில் குழந்தைகளின் உரிமைகள் எந்த அளவுக்கு சட்ட விதிகளாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன என்பதை நாம் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியமாகும். குழந்தைகளின் உரிமைகளுக்கு மேலதிகமாக, அடிப்படை உரிமைகளுடன் தாய்மார்களின் உரிமைகள் என்ற தனி அலகையும் சேர்க்க வேண்டும்.

தாய்மார்களும் பிள்ளைகளும் எமது சமூகத்தில் பாதிக்கப்படக்கூடிய பிரிவினராக இருப்பதால் அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் அவர்களை அடிப்படை உரிமைகளில் உள்வாங்க வேண்டும் என்றார்.

# யாழ்., கிளிநொச்சி மாவட்ட குடும்பங்களுக்கு பச்சிலைப்பள்ளி காணியை பகிர்ந்தளியுங்கள்

### வடக்கு ஆளுநரிடம் சிறீதரன் எம்.பி. எழுத்துமூல கோரிக்கை

கிளிநொச்சி மாவட்டத்தின், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளில் ஒருபகுதியையேனும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள காணியற்ற குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸிடம் எழுத்துமூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் நேற்றையதினம் (28) வடக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் உள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளுள் ஒருபகுதியை, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளிலும் காணியற்ற நிலையில் வாழ்ந்துவரும் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக, தாங்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருக்கும் என்னால் தொடர் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ள போதும், அவை தொடர்பில் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.



இந்நிலையில் மேற்படி காணிகள் தென்னிலங்கையின் தொழிலதிபர்களுக்கும் எமது மாவட்டத்தின் இயற்கை வளங்களைச் சுரண்டும் நோக்கோடு இயங்கக்கூடிய தனியார் நிறுவனங்களுக்கும் பகுதி பகுதியாகக் கூறுபோடப்படுவதை, கையாலாகாத்தனத்தோடு பார்த்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டுள்ளது. பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் தர்மக்கேணிப் பகுதியிலுள்ள 120 ஏக்கர் சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணி, புத்தளத்தைத் தளமாகக் கொண்ட ஒரு தனியார் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டு, அக்காணியின் துப்புரவுப் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாக அறியமுடிகிறது.

போரினாலும், இடப்பெயர்வுகளாலும் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டு இந்த மண்ணிலே மீளவும் குடியேறி, தமக்கென்றொரு நிலையான வாழ்வை அமைத்துக் கொள்வதற்கு சொந்தக் காணியற்ற நிலையில் உறவினர், நண்பர்களின் வீடுகளிலும் காணிகளிலும் வாழவேண்டிய அவலநிலைக்கு தள்ளப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான குடும்பங்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் நிர்க்கதியற்றிருக்கத்தக்கதாக, அரச காணிகளை தனவந்தர்களுக்கும் இந்த மாகாணத்தோடு எந்தத் தொடர்புகளுமற்றவர்களுக்கும் தாரைவார்த்துக் கொடுப்பதென்பது, அல்லலுறும் எமது மக்களுக்குச் செய்யப்படுகின்ற துரோகச்செயலாகவே அமையும் என்பதில் தாங்களும் கரிசனம் கொள்வீர்கள் என நம்புகிறேன். இதுதவிர, தமிழர் தாயகத்தின் பல்வேறு பகுதிகளிலும் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு, எமது மக்களின் பூர்வீக நிலங்கள் மெல்லமெல்ல பறிபோகும் அபாயகரமான நடைமுறைச் சூழலொன்றின் பின்னணியில், நீண்டகாலமாக வெற்றுக் காணிகளாக உள்ள பச்சிலைப்பள்ளியின் காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிக்கும் அதேகதி ஏற்படாது என்பதற்கு எம்மிடம் எதுவித உத்தரவாதமும் இல்லாத நிலையில், குறித்த காணிகளின் ஒரு பகுதியையேனும் காணியற்ற எமது மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் கிளிநொச்சி மாவட்டத்தின் இருப்பை நிலைநிறுத்துவதற்கு ஆவன செய்யுமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்- என்றுள்ளது.

# காலி சிறைச்சாலையில் கைதிகளை உறவினர்கள் பார்வையிட அனுமதி

காலி சிறைச்சாலையில் கைதிகளைப் பார்வையிடுவதற்கு உறவினர்களுக்கு மீண்டும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கைதிகளிடையே காய்ச்சல் மற்றும் தோல் தொடர்பான தொற்று பரவியமையினால் கடந்த நாட்களில் கைதிகளைப் பார்வையிடுவதற்கு உறவினர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

எவ்வாறாயினும், கைதிகளை வெளியில் அழைத்துச் செல்லும் நடவடிக்கை தொடர்ந்தும் தவிர்க்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

காலி சிறைச்சாலையில் கைதிகளிடையே காய்ச்சல் மற்றும் தோல் தொடர்பான தொற்று பரவியமையினால் இரு கைதிகள் உயிரிழந்ததுடன், 09 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

நோய்த் தொற்று தற்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக சிறைச்சாலை அதிகாரி ஒருவர் கூறினார்.

## அடுத்த...

2024 ஆண்டில் நடைபெறப்போகும் தேர்தலின்போது அடுத்த உயர்பதவிக்கு நாமல் ராஜபக்ஷ தெரிவாகுவார் என எதிர்பார்ப்பதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

பண்டாரகமவில் நேற்றுமுன்தினம் (27) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

2015ஆம் ஆண்டு நாடு வீழ்ச்சி கண்டிருந்தபோது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆட்சியமைத்ததைப் போன்று 2024 ஆம் ஆண்டும் பலமான ஆட்சியை நாம் அமைப்போம். எதிர்வரும் தேர்தலில் நாமல் ராஜபக்ஷ அடுத்த உயர்பதவிக்கு வருவார் என எதிர்பார்க்கிறேன். அது எனது கனவாகும். நான் அவருடைய தந்தையாருடன் மிக நெருங்கிப் பழகியிருக்கிறேன்.

யார் என்ன சொன்னாலும் இந்த நாட்டை ராஜபக்ஷக்களும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் பொறுப்பேற்கும் என்பதை நான் மிகவும் பொறுப்போடு கூறிவைக்க விரும்புகிறேன்.

நாமல் ராஜபக்ஷவிடம் கோரிக்கையொன்றை முன்வைக்க விரும்புகிறேன். மொட்டு கட்சியின் ஆட்சி அமையப்பெறும்போது இருவருக்கு பதவிகள் வழங்கப்பட வேண்டும்.

சபாநாயகர் பதவி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் பிரதி சபாநாயகர் பதவி சஜித் பிரேமதாசவுக்கும் வழங்கப்பட வேண்டுமென நான் கோருகிறேன். அவர்கள் இருவரும் நல்ல பேச்சாளர்கள் மாத்திரமே என்றார்.

## அரசியல்வாதிகள்...

பிரிவுக்குட்பட்ட தண்ணிமுறிப்பு குருந்தூர் மலைப் பகுதியில் தமிழ் மக்களினுடைய பூர்வீகக் காணிகள் தொல்பொருள் திணைக்களத்தினால் அபகரிக்கப்பட்டுள்ள நிலையில், குறித்த காணிகள் விடுவிப்பது தொடர்பில் குறித்த பகுதிக்கு அரசியல் தலைமைகள் மற்றும் அரச அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் விஜயம் செய்து நிலைமைகளை நேரில் அவதானித்தனர்.

குருந்தூர் மலைப் பகுதியிலே 1933.05.12 அன்று வர்த்தமானி ஊடாக சுமார் 78 ஏக்கர் காணி தொல்பொருள் திணைக்களத்துக்காக எடுக்கப்பட்டிருந்தது.

தற்போது குறித்த பகுதியில் தமிழ் மக்கள் வாழ்ந்த பூர்வீகக் காணிகள், வயல் நிலங்கள் உள்ளடங்களாக மேலும் 306 ஏக்கர் காணிகளை தொல்பொருள் திணைக்களம் அபகரிப்பதற்காக எல்லை கற்களை போட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் மக்கள் தங்களது காணிகளை மீட்டுத் தருமாறு தொடர்ச்சியாக கோரிவந்த நிலையில் கடந்த 16.08.2023 அன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற திணைக்களங்களால் அபகரிக்கப்பட்ட காணிகள் தொடர்பான விசேட கலந்துரையாடலின் போது குறித்த பகுதியை நேரடியாக விஜயம் செய்து இது தொடர்பில் முடிவெடுப்பது என தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய, நேற்றையதினம் குறித்த பகுதிக்கு விஜயம் செய்திருந்த முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும் இராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தான் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (நிர்வாகம்) க.கனகேஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) சி.குணபாலன், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் ம. உமாமகள் மற்றும் தொல்பொருள் திணைக்களத்தினுடைய மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களின் உதவிப் பணிப்பாளர் ஆர்.டி.ஜெயதிலக, மாவட்ட வனவள பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள், நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள், கமநல சேவை திணைக்கள அதிகாரிகள், நில அளவை திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட பல்வேறு திணைக்களங்கள், துறைசார் அதிகாரிகள் உள்ளிட்ட கிராம மக்கள் சென்று நேரடியாக குறித்த காணிகளை பார்வையிட்டிருந்தனர்.

இருப்பினும், குறித்த காணிகளில் விடுவிக்க கூடிய காணிகள் தொடர்பில் எந்தவிதமான சாதகமான பதில்களும் எட்டப்படாத நிலையில் நேற்றைய அவதானிப்புகளின் அடிப்படையில் குறித்த விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி செயலகம் மற்றும் தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் ஆகியோருக்கு தெரியப்படுத்தி அதனூடாக மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

## கடும் வறட்சியால்...

நாட்டில் கடும் வறட்சியினால் அதிக பாதிப்புகளை எதிர்நோக்க நேரிடுமென வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அதுல கருணாநாயக்க ஊடகங்களுக்கு நேற்று (28) தெரிவித்தார்.

மழை பெய்யக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்ற போதிலும் அவ்வாறான மழைவீழ்ச்சியால் தற்போதைய சூழ்நிலையிலிருந்து உடனடியாக மீள முடியாதென அவர் சுட்டிக்காட்டினார்.

மேல், சப்ரகமுவ, தெற்கு, மத்திய மாகாணங்களில் அவ்வப்போது மழைவீழ்ச்சி பதிவாகக்கூடுமெனத் தெரிவித்த அவர், வறட்சியினால் ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து உடனடியாக மீள முடியாதெனக் கூறினார்.

மேலும், நீர்த்தேக்கங்களில் நீர்மட்டத்தின் அளவு வெகுவாக குறைந்துவருவதால் எதிர்காலத்தில் நீர்மின் உற்பத்தியை மேற்கொள்வதிலும் சிரமங்களை எதிர்நோக்கும் நிலை உருவாகியுள்ளதாக பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, யால சரணாலயத்தில் உள்ள விலங்குகளுக்கு குடிநீர் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

## 18 எம்.பிக்களின்...

மாதிவெலவில் வீடு கிடைக்காத பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு மாதாந்தம் 75 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது.

இடப்பிரச்சினை காரணமாக மாதிவெல குடியிருப்பில் எம்.பிக்களுக்கு உத்தியோகபூர்வ வீடுகளை வழங்க முடியாதுள்ளதாக பாராளுமன்ற உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மேலும், மாதிவெல குடியிருப்பு தொகுதியில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் குழுவொன்று தங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## அஸ்வெசும...

பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரச வங்கிகளின் அதிகாரிகளை இன்று (29) சந்திக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

திறைசேரியினால் ஒதுக்கப்பட்டுள்ள பணம் முதற்கட்டமாக வங்கிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அதன் பின்னர் கட்டம் கட்டமாக அவை பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுமெனவும் நிதியமைச்சு தெரிவித்துள்ளது. மேலும், நலன்புரித் திட்டம் தொடர்பிலான ஆட்சேபனைகளை தீர்க்கும் பொருட்டு அதற்குரிய வேலைத்திட்டங்களை துரிதப்படுத்தவும் அமைச்சு தீர்மானித்துள்ளது.

## அரச வாகனங்களின்...

கணினி மென்பொருள் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அனைத்து அரச நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன தெரிவித்தார்.

பயன்படுத்தக்கூடிய, முடியாத வாகனங்களின் முழுமையான எண்ணிக்கையை துல்லியமாக மதிப்பிடுவதே இதன் நோக்கமென அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, இவ்வாறானதொரு கணக்கெடுப்பு கடந்த 2015ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதன்போது சுமார் 80 ஆயிரம் வாகனங்கள் அரச நிறுவனங்களில் காணப்பட்டமை கண்டறியப்பட்டது.

## நீதிமன்றத்...



யாழ்ப்பாணம்





கொழும்பு



படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன

ஆர்ப்பாட்டத்துக்கு தடைவிதித்து கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

கோட்டை பொலிஸார் முன்வைத்த விடயங்களை கருத்திற்கொண்டு இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அரசாங்கத்தின் தீர்மானங்கள், ஊழியர் நம்பிக்கை நிதியம், ஊழியர் சேமலாப நிதியம் ஆகியவற்றுக்கு தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலேயே போராட்டத்துக்கு அழைப்புவிடுக்கப்பட்டது.

தொழிலாளர் போராட்ட மத்திய நிலையத்தின் ஏற்பாட்டாளர் துமிந்த நாகமுவ, ஐக்கிய மக்கள் சக்தியின் முஜிபுர் ரஹ்மான் மற்றும் ஹிருணிகா பிரேமச்சந்திர, சுதந்திர மக்கள் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான சரித்த ஹேரத், வாசுதேவ நாணயக்கார உள்ளிட்ட 24 பேருக்கு கொழும்பின் சில பகுதிகள் மற்றும் பல வீதிகளுக்குள் பிரவேசிக்க தடை விதிக்கப்பட்டது.

அதற்கிணங்க, நேற்று (28) காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையான காலப்பகுதிக்குள் கொழும்பு கோட்டை பொலிஸ் பிரிவிலுள்ள ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, நிதி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி போன்ற அரச நிறுவனங்களுக்குள் பிரவேசிக்க தடை விதிக்கப்பட்டது.

பொது மற்றும் தனியார் சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கக் கூடாது எனவும் மக்களை தூண்டும் வகையில் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடக்கூடாது எனவும் நீதிமன்ற உத்தரவில் கூறப்பட்டது.

எனினும், நீதிமன்றத் தடை உத்தரவை மீறி வீதியை மறித்து ஆர்ப்பாட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பினால் ஊழியர் நம்பிக்கை நிதியம், ஊழியர் சேமலாப நிதியம் ஆகியவற்றுக்கு பாதிப்பு ஏற்படுவதாக தெரிவித்து யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நேற்று (28) மதியம் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இவ்விரு நிதியங்களிலிருந்தும் 50 வீதமான தொகை எதிர்வரும் 16 வருட காலத்தில் அரசாங்கத்தினால் பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாக குற்றஞ்சுமத்தி பதாதைகளை ஏந்தியவண்ணம் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம், வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம், அகில இலங்கை அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம், பொது முகாமைத்துவ உதவியாளர் சேவைச் சங்கம், வடமாகாண சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் சங்கம், வடமாகாண கால்நடை போதானாசிரியர் சங்கம், இலங்கை தபால் தொலைத்தொடர்பு சேவை உத்தியோகத்தர் சங்கம், வடமாகாண அரச சாரதிகள் சங்கம், வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தொழிற்சங்கம் ஆகிய 09 தொழிற்சங்கங்கள் போராட்டத்துக்கு ஆதரவளித்தன.

## வெல்லம்பிட்டியில்...

இந்தச் சம்பவத்தில் கொழும்பு 15ஐச் சேர்ந்த 47 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளந்தெரியாத ஆயுததாரிகள் இருவர் கைத்துப்பாக்கியை பயன்படுத்தி துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

முச்சக்கர வண்டியில் பயணித்துக்கொண்டிருந்த நபர் மீதே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், சந்தேக நபர்களை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை வெல்லம்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தேயிலை உற்பத்தி...

நாட்டில் பெரும்பாலான பகுதிகளில் நிலவும் கடும் வறட்சி காரணமாக தெற்கில் தேயிலை உற்பத்தி கடும் வீழ்ச்சியை சந்தித்துள்ளது. குறிப்பாக காலி, தெனியாய, இரத்தினபுரி மாவட்டங்களில் தேயிலை உற்பத்தி மூன்றில் ஒரு பகுதியாக குறைவடைந்துள்ளதாக தொழிற்சாலை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

காலியில் ஹிமிதும, நெலுவ, யக்கலமுல்ல, பத்தேகம ஆகிய பகுதிகளில் தேயிலைக்கான நீரைப் பெற்றுக்கொள்ள முடியாமையால் செடிகள் அனைத்தும் வாடிப்போயுள்ளதாக தொழிலாளர்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

மேலும், இரத்தினபுரி, தெனியாய ஆகிய மாவட்டங்களில் சிங்கராஜ வனத்திலிருந்து நீர் கிடைக்கப்பெறுகின்ற போதிலும் தற்போதைய காலநிலையால் ஓரளவுக்கேனும் நீரைப் பெற்றுக்கொள்ள முடியவில்லையென தேயிலைத் தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## பெல்மதுளையில்...

இரத்தினபுரி மாவட்டம், பெல்மதுளை பகுதியில் நேற்று முன்தினம் (27) இரவு ஏற்பட்ட காட்டுத் தீயினால் 07 ஏக்கருக்கும் அதிகமான வனப் பகுதி எரிந்து நாசமாகியுள்ளது.

பெல்மதுளை, குட்டாபிட்டிய தொட்டிலாகம மலைப் பகுதியில் தீ பரவியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தீயை கட்டுப்படுத்தும் முயற்சிகளை தீயணைப்பு படையினர், பொலிஸ், இராணுவத்தினர் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து மேற்கொண்டதாகவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

இந்தத் தீப் பரவலுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், சம்பவம் தொடர்பான விசாரணைகளை பெல்மதுளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

வேண்டுமென்றே சிலர் காட்டுத் தீயை ஏற்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாகவும் கடும் வறட்சியால் காட்டுத் தீ விரைவாக பரவி வருவதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

பதுளை மாவட்டம் உட்பட பல பிரதேசங்களில் எதிர்காலத்தில் காட்டுத் தீயால் பேரழிவுகள் ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

## வறண்டுபோன...

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் நிலவும் கடும் வெப்பமான காலநிலை காரணமாக 10 ஆயிரத்துக்கும் அதிகமான ஏரிகள் முற்றாக வறண்டுபோயுள்ளதாகவும் பிரதான நீர்த் தேக்கங்களின் நீர்மட்டம் 35 முதல் 40 வீதத்தால் குறைவடைந்துள்ளதாகவும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், நிதியமைச்சினால் கிடைக்கப்பெற்ற நிதி ஒதுக்கீட்டின்மூலம் அடுத்த பருவமழைக்கு முன்னதாக சேதமடைந்துள்ள குளங்களை புனரமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். பருவ மழைக்கு முன்னர் குளங்களை சீரமைப்பதன்மூலம் அதிக தண்ணீரை தேக்கிவைத்து விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு உதவுவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# மக்களின் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளை வனஜீவராசிகள் திணைக்களம் கையகப்படுத்தியுள்ளது

## முசலி பிரதேசத்தில் 15 சதவீதமான காணிகளே எஞ்சியிருப்பதாக ரிஷாட் எம்.பி. குற்றச்சாட்டு

அதிகாரத்தில் இருக்கும்போது, மக்களுக்கு வழங்கிய ஆயிரக்கணக்கான காணிகள் இன்று வனஜீவராசிகள் மற்றும் வனபரிபாலனத் திணைக்களங்கள் ஆகியவற்றால் கையகப் படுத்தப்பட்டிருப்பதாகவும் முசலி பிரதேசத்தில் 15 சதவீதமான காணிகளே தற்போது மக்களின் பாவனைக்காக எஞ்சியிருப்பதாகவும் மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

மன்னார், முசலி, வை.எம்.எம்.ஏ. கிளையின் ஏற்பாட்டில் அண்மையில் முசலி தேசிய பாடசாலை கேட்போர்கூடத்தில் இடம்பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

முசலி பிரதேசத்தில் குறுகிய காலத்துக்குள் நாம் பல பணிகளையும் வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்தமை வெளிப்படையானது. முசலியில் வானளாவிய ரீதியில் உயர்ந்திருக்கும் மாடிக் கட்டிடங்கள், பாடசாலைகள், மக்கள் குடியிருக்கும் வீடுகள் மற்றும் இன்னோரன்ன பணிகள் வானத்திலிருந்து திடீரென குதித்தவை அல்ல.

பண்டாரவெளி, கொண்டச்சி, பொற்கேணி ஆகிய பாடசாலைகள் மற்றும் புதிதாக உருவாக்கப்பட்ட சாஹிரா, அல்-ஜாசிம் ஆகியவை மிகவும் குறுகிய காலத்தில் மீண்டும் கட்டியெழுப்பப்பட்டவையே. அப்போது, இப்பாடசாலைகளை தடைகள், சவால்கள் மற்றும் கஷ்டங்களுக்கு மத்தியில் நாங்கள் ஆரம்பித்தபோது மாணவர்கள் மிகவும் குறைவாகவே இருந்தனர். முசலி பாடசாலையை தேசிய பாடசாலையாக ஆக்கவேண்டுமென நாங்கள் பகீரத முயற்சிகள் எடுத்தபோது, மாணவர்களின் வரவு குறைவாகவே இருந்தது. எனினும், விசேட அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பித்தே அதில் நாம் வெற்றிபெற்றோம். அப்போது தேசிய ரீதியில் மூன்று பாடசாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. அதில் முசலியும் ஒன்று.

நான் அமைச்சராக இருந்த போது, முசலி பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளை மக்களுக்கு வழங்கியதால், வில்பத்து பூங்காலை அழிப்பதாக என்மீது போலிக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு நீதிமன்றம் வரை சென்றார்கள். வேறு மாவட்டத்தில் மரம் நடவேண்டுமென எனக்கெதிராக தீர்ப்பும் வந்தது. 1,100 மில்லியன் ரூபாவுக்கு மரம் நட்டு, பத்து வருடங்களுக்கு அதை பராமரிக்கும் செலவுடன், மொத்தமாக 116 கோடி ரூபா செலுத்த வேண்டுமென தீர்ப்பு வந்தது. அந்தத் தீர்ப்புக்கு எதிராக நான் மேன்முறையீடு செய்துள்ளேன். அந்த வழக்கு இடம்பெற்று வருகின்றது.

நாங்கள் பொறுப்பேற்று இந்த பிரதேசத்துக்கு வந்தபோது "கண்ணிவெடி அபாயம் இருக்கின்றது. கால்வைக்க வேண்டாம்" என பொலிஸார் எச்சரித்தனர். 'பாலைக்குளிக்கு செல்ல வேண்டாம்' என பொலிஸார் அறிவுறுத்தினர். கொண்டச்சி கிராமத்திலுள்ள நிலக்கண்ணிவெடிகளை அகற்ற விசேட வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்கி, எமது சொந்த நிதியில் கண்ணிவெடிகளை அகற்றி, மக்களை மீள்குடியேற்றினோம்.

கடந்த நான்கு வருடங்களாக நாம் மிகவும் அமைதியாக இருக்கின்றோம். எவராவது இந்தப் பணிகளை தொடரவேண்டுமெனவே விரும்புகின்றோம். எனினும், நாம் வழங்கிய காணிகளில் பல ஏக்கர்கள் இன்று வனஜீவராசிகள் திணைக்களத்தினால் அபகரிக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தட்டிக்கேட்க யாரும் இல்லை. பார்ப்பாரும் கேட்பாரும் அற்ற சமூகமாகவே இந்தப் பிரதேச மக்கள் வாழ்கின்றனர்.

அண்மையில் முல்லைத்தீவிலும் வவுனியாவிலும் பல்லாயிரம் ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன, ஆனால் முசலி பிரதேசத்தில் எதுவுமே விடுவிக்கப்படவில்லை. ஜனாதிபதி காணிகளை விடுவிக்குமாறு கூறுகின்றார். 1984ஆம் ஆண்டுக்குப் பின்னர், வர்த்தமானியின் மூலம் கையகப்படுத்தப்பட்ட அனைத்து காணிகளையும் விடுவித்து, மக்களின் தேவைகளை நிறைவேற்றுமாறு அவர் கூறுகின்றார்.

அண்மையில் இடம்பெற்ற மன்னார் கூட்டத்தில், முசலி பிரதேசத்தில் ஒரு துண்டுக் காணியையேனும் விடுவிக்க வேண்டும் என்ற முடிவு எடுக்கப்படவில்லை. இந்த நியாயத்தை நாம் தெரிவித்தபோது, கொழும்பிலிருந்து வந்த அதிகாரிகள் 27ஆம் திகதி இதற்கென ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்து, அதைப்பற்றி பேசுவோம் என உறுதியளித்தனர். ஆனால், அவ்வாறு முடிவு எடுக்கப்பட்டபோதும் இங்குள்ள உள்ளூர் அதிகாரிகள் அதற்கான ஏற்பாடுகளை செய்யாமல் தலைமறைவாகிவிட்டனர். இதுதான் இன்றைய நிலை.

முசலியிலுள்ள கல்விமான்களும் ஊர்மக்களும் இது தொடர்பில் பேச வேண்டும். இவற்றைத் தட்டிக் கேட்க வேண்டும். நிலத்துக்காகவே வடக்கு, கிழக்கில் போராட்டங்கள் நடைபெற்றன - என்றார்.



# பெரஹெரவில் கலந்துகொள்ளும் கதிரியக்க வீச்சு

## இது திட்டமிட்ட சதித் திட்டமா என்பது தொடர்பில் விசாரணை செய்யுமாறு பொலிஸ் மா அதிபரிடம் சன்ன ஜயசுமன எம்.பி. கோரிக்கை

யானைகள் மீது கதிரியக்க ஒளியை படச்செய்து, அவற்றை குழப்பமடையச் செய்து கண்டி தலதா பெரஹெரவுக்கு இடையூறு ஏற்படுத்தும் நோக்கில் திட்டமிட்ட வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதை ஆராய்ந்து பார்க்குமாறு அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சன்ன ஜயசுமன பொலிஸ் மா அதிபருக்கு கடிதமொன்றை அனுப்பி கோரிக்கை முன்வைத்துள்ளார்.

பௌத்த பெரஹெரக்களுக்கு இடையூறு விளைவித்து, அவமதிப்பை ஏற்படுத்துவதற்கு பல வருடங்களாக திட்டமிட்ட வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வருகின்றமை உறுதியாகியுள்ளதாகவும் அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கண்டி தலதா பெரஹெரவுக்கு எதிராக கடந்த காலங்களில் சமூக வலைத்தளங்களில் ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கண்டி தலதா பெரஹெரவில் பயணிக்கும் யானைகளை சிரமப் படுத்தும் வகையில் ஒருசிலர் அவற்றின் மீது கதிரியக்க ஒளியைப் படச்செய்வதாக யானைப் பாகன்கள் தெரி வித்துள்ளதாகவும் யானைகள் மற்றும் விவசாய நிலங்களை சேதப்படுத்தும் வேறு விலங்குகளை துரத்துவதற்காக பயன்படுத்தப்படும் கதிரியக்க ஒளியை வெளியிடும் சிறியளவான உபகரணங்கள் சில வாரங்களுக்கு முன்பே பெரஹெர இடம்பெறும் பிரதேசங்களில் பொருத்தியிருக்கலாம் என்றும் கருத்துகள் வெளியிடப்படுவதாகவும் அவர் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.



அதிக சக்திவாய்ந்த கதிரியக்க ஒளியை வெளியிடும் உபகரணங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா, அவற்றை யார் இறக்குமதி செய்தது என்பது தொடர்பில் விசாரணை செய்யுமாறும் பேராசிரியர் சன்ன ஜயசுமன பொலிஸ் மா அதிபரிடம் கோரியுள்ளார்.

# கால்பந்து சம்மேளனத்துக்கான தடை நீக்கம்

இலங்கை கால்பந்து சம்மேளனதடுக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்குவதற்கு சர்வதேச கால்பந்து சம்மேளனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 21ஆம் திகதி அதன் அங்கத்துவத்திலிருந்து இலங்கை கால்பந்து சம்மேளத்தை நீக்க சர்வதேச கால்பந்து சம்மேளனம் நடவடிக்கை எடுத்திருந்தது.

சர்வதேச கால்பந்து சம்மேளனத்தினூடாக இலங்கை விளையாட்டுத்துறைசார் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருந்த அறிவுறுத்தல் தொடர்பில் இலங்கை விளையாட்டுத் துறை அமைச்சு தெரிவித்த சிறந்த பதிலை கருத்திற்கொண்டு நேற்று முன்தினம் (27) முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த தீர்மானத்தை எடுத்ததாக அந்த சம்மேளனம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை கால்பந்து சம்மேளன தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 29ஆம் திகதி நடத்தவுள்ளதாக இலங்கை விளையாட்டு அதிகாரிகள் வாக்குறுதியளித்துள்ளதுடன் அதுவரையில் இலங்கை கால்பந்து சம்மேளனத்தை அவதானத்துடன் செயற்படுமாறு சர்வதேச கால்பந்து சம்மேளனம் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிணைமுறிகள் வெளியீடு செப்.11 வரை ஒத்திவைப்பு

தேசிய கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்துக்கமைய, பிணைமுறி வெளியிடும் செயற்பாடு நேற்று (28) முன்னெடுக்கப்படவிருந்த நிலையில் அதற்கான காலம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 11ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தேசிய வருமான வரிச் சட்டதிருத்தத்துக்கு எதிராக நடைமுறையிலுள்ள நீதிமன்ற செயற்பாடுகளுக்கமையவே இவ்வாறு காலம் நீடிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

தேசிய கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்துக்கமைய அரசால் வெளியிடப்பட்டுள்ள சகல பிணைமுறிகளும் 9 சதவீத வட்டி வீதத்தின் அடிப்படையில் மீண்டும் வெளியிடுவதாக யோசனை முன்வைப்பட்டுள்ளது.

நேற்று இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவிருந்தது. எவ்வாறாயினும், ஊழியர் சேமலாப நிதியம் இதனூடாக கடுமையாக பாதிப்படுமென தெரிவித்து பல்வேறு தரப்பினர் அதற்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆவணி மாதம் 12ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

மேஷம்: புதிய தொழில் வாய்ப்புகள் வந்தமையும், திட்டமிட்ட காரியங்களில் சாதனை செய்வீர்கள்.

ரிஷபம்: வெளிநாட்டுப்பயணம் நினைத்ததுபோல நிறைவேறும், உங்கள் சொத்துகளின் மீது கவனம் செலுத்துங்கள்.

மிதுனம்: ஆலோசிக்காது முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம், கோபத்தால் பொறுமை இழந்து விடாதீர்கள

கடகம்: நினைத்த காரியத்தில் வெற்றி, நீங்கள் கேட்ட கடன் இன்று கிடைக்கும்.

சிம்மம்: அதிர்ஷ்டத்தை சோதித்து பணத்தை இழப்பீர்கள், மனதை சமாதானப்படுத்திக் கொள்ளுங்கள்.

கன்னி: வீடு, வாகனத்தால் வீண் செலவுகள் அல்லது தொல்லைகள் ஏற்படும், தாயின் ஆசியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

துலாம்: நீண்ட நாள் முயற்சி வெற்றியைக் கொடுக்கும், நண்பர் உறவினர் தொடர்பால் நன்மைகள் உண்டு.

விருச்சிகம்: வாய் வார்த்தைகளை நிதானமாகப் பிரயோகியுங்கள், கடன் கொடுப்பதும் வாங்குவதும் சிக்கலைத்தரும்.

தனுசு: அலைச்சலும் செலவுகளும் நிறைந்த நாள், மனதை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ளவும்.

மகரம்: நினைத்த காரியத்தை சிரமமின்றி முடிப்பீர்கள், உடல் பலம், மன நலம் சிறப்பாக இருக்கும்.

கும்பம்: குடும்ப உறவில் சிக்கல் ஏற்படலாம், தேவையற்ற பயணங்களால் வெறுப்படைவீர்கள்.

மீனம்: தொழில் ரீதியில் உங்களுக்கு பாராட்டுகள் கிடைக்கும், விரும்பிய பெண் உறவால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**திதி:** திரயோதசி பி.ப.2.48 வரை பின் சதுர்தசி
**நட்சத்திரம்:** திருவோணம் பி.ப.11.50 வரை பின் அவிட்டம்
**யோகம்:** மரண யோகம் முழுவதும்
**வார சூலை:** வடக்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது
**நல்லநேரம்:** மு.ப. 8.07– 9.07 மணி வரை
**ராகுகாலம்:** 3.07 – 4.37 மணி வரை
**எமகண்டம் :** 9.07 – 10.37 மணி வரை
**குளிகை:** 12.07 – 1.37 மணி வரை
**சந்திராஷ்டமம்:** மிதுன ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தன அதிஷ்டம்:** கார்த்திகை, உத்தரம், உத்தராடம் (பிறந்தவர்களுக்கு)
**விஷேட தினம்:** ஓணம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# பணமோசடி செய்தவரை விடுவித்ததாக தெரிவித்து வவுனியா பொலிஸாருக்கு எதிராக ஆர்ப்பாட்டம்





சி.திவியா

இந்தியாவுக்கு சுற்றுலா செல்வதாகக் கூறி பணமோசடி செய்த நபரை மக்கள் பிடித்துக் கொடுத்தும், வவுனியா பொலிஸார் அவர்களை விடுவித்துள்ளதாக தெரிவித்து வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலகம் முன்பாக பாதிக்கப்பட்டவர்களால் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டமானது நேற்று (28) மதியம் இடம்பெற்றது.

இதுதொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கண்டியைச் சேர்ந்த நபர் ஒருவர் இந்தியாவுக்கு பௌத்தர்களை யாத்திரையாக அழைத்துச் செல்வதாக தெரிவித்து வவுனியா மற்றும் மதவாச்சி ஆகிய பகுதிகளில் 20இற்கும் மேற்பட்டவர்களிடம் பணம் பெற்றுள்ளார். நபர் ஒருவரிடமிருந்து ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபா வீதம் பணம், அவர்களது கடவுச்சீட்டு, அடையாள அட்டை பிரதி உள்ளிட்ட ஆவணங்களைப் பெற்றுக்கொண்டபோது குறித்த நபர் யாத்திரைக்கான எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. மக்களிடம் பணம்பெற்ற பின் மக்களுடன் தொடர்பில்லாது நடமாடியுள்ளார்.

இதனால், அவரது நடவடிக்கையில் சந்தேகமடைந்த பணம் செலுத்தியோர், மதவாச்சி பகுதியிலுள்ள பொலிஸ் நிலையம் ஒன்றில் குறித்த நபருக்கு எதிராக முறைப்பாடு பதிவு செய்திருந்தனர். எனினும் சம்பந்தப்பட்டவர் பொலிஸ் நிலையம் செல்லாது தலைமறைவாக திரிந்துள்ளார்.

இந்நிலையில், கடந்த 18ஆம் திகதி குறித்த நபர் வவுனியா குடிவரவு - குடியகல்வுத் திணைக்களம் முன்பாக நிற்பதாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு தெரியவந்ததையடுத்து அங்கு சென்ற பாதிக்கப்பட்டோர் குறித்த நபரை பிடித்து வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்துள்ளனர். அவர் குறித்த நபருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்து பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப்புப் பிரிவில் ஒப்படைத்துள்ளார். எனினும், முறைப்பாடு எடுக்கப்படாது குறித்த நபர் விடுவிக்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் குற்றஞ்சாட்டுவதுடன், வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபர் காரியாலத்தில் முறைப்பாடு ஒன்றையும் நேற்று (28) பதிவு செய்ததுடன், வவுனியா பொலிஸார் குற்றவாளியை விடுவித்தாக தெரிவித்து பொலிஸ் மா அதிபர் காரியாலயம் முன்பாக ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

இதன்போது பாதிக்கப்பட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில், தம்மை ஏமாற்றிய நபரை பொலிஸார் உடனடியாக கைதுசெய்து தமது பணத்தையும், கடவுச்சீட்டையும் பெற்றுத் தரவேண்டும். பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாம் சிறுக சேர்த்த பணத்தை சுற்றுலாவை நம்பி கொடுத்து ஏமாந்துள்ளோம். ஏமாற்றியவரை நாம் பிடித்துக் கொடுத்தும் பொலிஸார் அவரை விடுவித்துள்ளனர். எமக்குத் தேவை எமது பணமும் கடவுச்சீட்டுமே. அதனை பொலிஸார் பெற்றுத் தர வேண்டும் என தெரிவித்தனர்.



**தர்கா நகர் அல்-ஹம்றா மஹா வித்தியாலயத்தின் வாசிகசாலைக்கு, ஸுஹைர் ஹாஜியார் ஹஜ் ரிவல்ஸ் நிறுவனத்தால் 25 பிளாஸ்ரிக் கதிரைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம்.அஸ்லம் ஹாஜியார், பாடசாலை அதிபர் ஹாஜியானி பஸ்லியா ஸஹ்ரானிடம் கையளிப்பதையும், ஸுஹைர் ஹாஜியார் ஹஜ் நிறுவனத்தின் தலைவர் தேசபந்து அல்ஹாஜ் ஏ.பீ.எம்.ஸுஹைர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் நபீல் நஸீர், பாடசாலை அபிவிருத்தி சங்க பொருளாளர் பஸீன் பாரூக், பாடசாலை பிரதி அதிபர் அல்ஹாஜ் ரிஸான் மஹ்ரூப், உபஅதிபர் பரூஜா ஸகீல் ஆகியோரும் இவ்வைபவத்தில் கலந்து சிறப்பித்தனர்.**

**படம்: பீ.எம்.முக்தார்**




தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023 ஓகஸ்ட் 29ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# பிரிக்ஸ் மாநாடும் இலங்கையும்!

பிரேசில், ரஷ்யா, சீனா, இந்தியா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய ஐந்து நாடுகளைக் கொண்ட பிரிக்ஸ் (BRICS) அமைப்பில் இலங்கை உறுப்புரிமை பெற வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ள விவகாரம் எமது கவனத்தை ஈர்த்திருக்கிறது.

கம்மன்பில ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள பகிரங்கக் கடிதத்தில், ''உலகளாவிய பொருளாதார மற்றும் அரசியல் போக்குகள் வேகமாக மாறிவருகின்றன. உலக வல்லரசுகள் ஆசியாவை நோக்கி நகர்கின்றன. இலங்கை தனது வெளியுறவுக் கொள்கையை மறுபரிசீலனை செய்து அதற்கேற்ப மறுசீரமைக்க வேண்டிய நேரம் இது.

BRICS இல் உள்ள நாடுகள் உலக மொத்த தேசிய உற்பத்தியில் 27 சதவிகிதத்தைக் கொண்டுள்ளன. BRICS இன் முன்முயற்சியாக சர்வதேச நாணய நிதியம் (IMF) மற்றும் உலக வங்கிக்கு மாற்றாக 50 பில்லியன் அமெரிக்க டொலர் ஆரம்ப மூலதனத்துடன் 'புதிய வளர்ச்சி வங்கி' என்ற கடன் வழங்கும் நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணயமாக அமெரிக்க டொலர், அமெரிக்கா உள்ளிட்ட G7 நாடுகளின் ஆதரவுடன் உலக சந்தையில் ஆதிக்கம் செலுத்துகிறது. அமெரிக்க டொலரைப் பொருட்படுத்தாமல் சர்வதேச பரிவர்த்தனைகளுக்கான பொதுவான அணுகுமுறையை BRICS இப்போது ஆராய்ந்து வருகிறது. ஆகவே, இலங்கையும் இந்த அமைப்பில் இணைவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்'' - என்று குறித்த கடிதத்தில் ஜனாதிபதிக்கு கம்மன்பில வலியுறுத்தியுள்ளார்.கம்மன்பில ஒருபக்கம் இனவாதம் பேசினாலும் பொருளாதாரம் தொடர்பான அவரது யோசனை - ஆலோசனை சற்று பரிசீலிக்கப்படவேண்டிய ஒன்றே.

நடந்துமுடிந்த பிரிக்ஸ் மாநாடு குறித்து சற்று கவனிக்கவேண்டும்.தென்னாபிரிக்காவின் ஜோஹன்னஸ்பார்க் நகரில் நடைபெற்று முடிந்த 15 ஆவது மாநாட்டில், 'பிரிக்ஸ்' கூட்டமைப்பில் புதிதாக ஆறு நாடுகளை இணைக்க ஒருமித்த முடிவு எட்டப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் நடைபெற்ற 14 ஆவது மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் நீட்சிதான் இது.

பிரேஸில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா ஆகிய ஐந்து நாடுகளைக் கொண்ட பிரிக்ஸ் கூட்டமைப்பில் புதிதாக ஆர்ஜென்டீனா, எகிப்து, எத்தியோப்பியா, ஈரான், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய ஆறு நாடுகள் 2024, ஜனவரி 1ஆம் திகதி முதல் அதிகாரபூர்வமாக இணையவுள்ளன. இவற்றில் எகிப்து, ஈரான், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகியவை மத்திய கிழக்கின் முக்கியமான நாடுகள். எத்தியோப்பியா ஆபிரிக்காவையும், ஆர்ஜென்டீனா தென்னமெரிக்காவையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

ஏற்கனவே உலக மக்கள் தொகையில் 40%, உலக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 23% என வலிமையுடன் கூடிய கூட்டமைப்பாக பிரிக்ஸ் உள்ள நிலையில், புதிய நாடுகளின் வருகையின் மூலம் மக்கள்தொகை பிரதிநிதித்துவம் மேலும் அதிகரிக்கும். அத்துடன், உலகின் மிகப்பெரிய எண்ணெய் உற்பத்தி நாடுகளான சவூதி அரேபியா, ஈரான், ஐக்கிய அரபு அமீரகம் ஆகியவை இணைக்கப்படுவதன் மூலம் கூட்டமைப்பு மேலும் வலுவடையும் என்பதில் சந்தேகமில்லை.

பிரிக்ஸ் அமைப்பில் இணைவதற்காக 40 நாடுகள் விருப்பம் தெரிவித்து அவற்றில் 22 நாடுகள் முறைப்படி விண்ணப்பித்திருந்த நிலையில், ஆறு நாடுகளை இணைக்க ஒருமித்த முடிவு எட்டப்பட்டமை முக்கியமான விஷயமாகும்.

பிரிக்ஸ் மாநாட்டை உலக நாடுகள் உன்னிப்பாக கவனித்ததற்கான முக்கிய காரணங்களில் ஒன்று பொதுச் செலாவணி. பிரிக்ஸ் நாடுகளுக்கிடையே பொதுவான செலாவணியைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவருவது தொடர்பாக ஆராய்வதற்கான பொறுப்பு சம்பந்தப்பட்ட நாடுகளின் நிதியமைச்சர்கள்-மத்திய வங்கி ஆளுநர்களிடம் ஒப்படைக்கப்படும் என மாநாட்டில் முடிவெடுக்கப்பட்டது. அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள மாநாட்டுக்குள் அதற்கான அறிக்கையை அவர்கள் தாக்கல் செய்வர். அதனடிப்படையில் பொதுச் செலாவணி குறித்து முடிவெடுக்கப்படும்.

பிரிக்ஸ் கூட்டமைப்பு விரிவாக்கத்தில் பெரிதும் ஆர்வம் காட்டிய நாடு சீனாதான். இந்தக் கூட்டமைப்பில் 70 சதவீத பொருளாதாரத்துடன் சீனா முதலிடத்திலும், 13 சதவீத பொருளாதாரத்துடன் இந்தியா இரண்டாம் இடத்திலும் உள்ளன. தனது பொருளாதார செல்வாக்கை மேலும் விரிவுபடுத்தும் ஒரு வாய்ப்பாக பிரிக்ஸ் விரிவாக்கத்தை சீனா பார்க்கிறது.

ரஷ்யாவின் உக்ரைன் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து மேலை நாடுகளால் ரஷ்யா தனிமைப்படுத்தப்பட்டிருக்கிறது. ரஷ்யாவை ஆதரிக்கும் சீனாவுக்கு இப்போதைய சூழலில் மேலை நாடுகள் இடம்பெறாத பிரிக்ஸ் கூட்டமைப்பு விரிவுபடுத்தப்படுவதில் தனிப்பட்ட விருப்பமும் உள்ளது.

எல்லைப் பிரச்சினையால் கருத்து வேறுபாடுகளைக் கொண்டுள்ள இந்தியாவும் சீனாவும் பிரிக்ஸ் கூட்டமைப்பில் அங்கம் வகிப்பது ஆச்சரியமென்றால் பரம எதிரிகளாகக் கருதப்படும் ஈரானும் சவூதி அரேபியாவும் இந்தக் கூட்டமைப்பில் இணைக்கப்படுவது மற்றோர் ஆச்சரியம். அண்மையில் சீனாவின் ஏற்பாட்டில் ஈரானும் சவூதி அரேபியாவும் பகையை மறந்து உறவைத் தொடங்கியுள்ளபோதிலும், இதுபோன்ற இணக்கம் இல்லாத நாடுகளின் வருகை பிரிக்ஸ் கூட்டமைப்பின் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளுக்கு சவாலானதாக மாறக்கூடும்.

மேற்கு வல்லரசுகளுக்கு மாற்றுக் கூட்டமைப்பான பிரிக்ஸ், தெற்குலகின் குரலாக அறியப்படுகிறது. அந்தக் கூட்டமைப்பு விரிவாக்கப்படுவதன் மூலம் தெற்குலகின் குரல் ஓங்கி ஒலிக்க வழி ஏற்பட்டிருக்கிறது. ஆனால், அது கூட்டமைப்பின் ஒருமித்த குரலாக இருக்க வேண்டுமே தவிர, மேலை நாடுகளுக்கு எதிரான ரஷ்யாவின் அல்லது சீனாவின் தனித்த குரலாக இருக்க அனுமதிக்கப்படக் கூடாது என்பது அரசியல் ஆய்வாளர்களின் கருத்து.

பிரிக்ஸில் இணையும் வாய்ப்பு ஏற்பட்டால் இலங்கையின் இப்போதுள்ள நிலைமைக்கு அதுவொரு ஆறுதலைத் தருவதாக இருக்கும்.ஆனால், இலங்கை அதில் இணைக்கப்படுவதற்கான அடிப்படை கள நிலைவரம் இல்லையென்பதே உண்மை நிலை.

# பாடசாலையில் சமவயது குழுக்களின் செல்வாக்கு

தனியாள் சமூகமயமாக்கலில் குடும்பத்துக்கு அடுத்ததாக அதிக செல்வாக்குச் செலுத்தும் கருவி சமவயதுக் குழு ஆகும். இது பாடசாலையின் மிக வலுவான சமூக இயைபாக்கக் காரணியாக விளங்குகின்றது.

சமவயதைக் கொண்ட பிள்ளைகளின் கூட்டத்தினரை சமவயதுக் குழு எனலாம். இக்குழு உறுப்பினர்களிடம் ஒத்த சிந்தனைகள், செயற்பாடுகள், எதிர்பார்ப்புகள், விருப்பு, வெறுப்புகள் ஆர்வங்கள், மொழிக்கோலம் போன்றன இருக்கும். எனவே, பாடசாலை என்பது சமூக நிறுவனம் ஆகும். எனவே, சமூகத்திற்கு ஏற்றாற்போல் மாணவர்களை உருவாக்கும் பொறுப்பு பாடசாலைக்கு காணப்படுகின்றது. அதற்கு சமூகமயமாக்கல் இன்றியமையாத காரணிகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. அதனடிப்படையில் சமவயது குழுக்கள் அதற்குத் துணை புரிவதை நாம் நோக்கலாம்.

ஒரு பாடசாலையில் பல சமவயதுக் குழுக்கள் காணப்படும். பாடசாலையின் எதிர்பார்ப்பிற்கமைய நடக்கும் குழுக்களும், எதிராக இயங்கும் குழுக்களும் காணப்படுவதுண்டு. இதில் சற்று பிரபல்யமானவர்கள் தலைவர்களாக இருப்பர். எதிர்க்குழு விமர்சனங்களை முன்வைத்துக் கொண்டே இருக்கும். ஆதரவான குழு முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். இவ்வாறு பாடசாலைச் செயற்பாடுகளில் சமவயதுக் குழுக்கள் முக்கிய பங்கை வகிக்கின்றது.

பாடசாலைச் செயற்பாடுகளில் முக்கிய செயற்பாடு கற்றல் - கற்பித்தல் செயற்பாடே. சகபாடிகளுக்கிடையே உடன்பாடான நல்லுறவு நிலவும்போது, வகுப்பில் கற்றல் - கற்பித்தலுக்கு வாய்ப்பாக அமைகின்றது. கற்றல் - கற்பித்தலுக்கு பயன்படும் சமவயதுக் குழுவினரின் ஒன்றிணைந்த செயற்பாடுகளை மதிப்பீடு செய்யும் திறனை ஆசிரியர் பெற்றிருப்பது அவசியமாகின்றது. திறமை மிகுந்த ஆசிரியர்கள் பாடசாலை எதிர்பார்க்கும் நோக்கத்தை நிறைவேற்ற ஒத்த வயதுக்குழுவைப் பயன்படுத்துவர். கூட்டுக் குழுக்கற்றல்,சகபாடி கற்பித்தல், சகபாடி இணைந்து கற்றல் என சகபாடி கற்றல் மூன்று வகைகளாகப் பாடசாலையில் நடத்தப்படலாம். சமவயதுக் குழுக்கள் வகுப்பறைகளில் இருப்பதனால் ஆசிரியருக்கான கற்பித்தல் செயற்பாடுகளை இலகுவான முறையில் முன்னெடுக்க முடிகிறது.

ஒரே பண்புள்ள ஒரே வயதுக்குழுவினர் வகுப்பறைகளில் இருப்பதனால் ஒரே நேரத்தில், வழிகாட்டி, இலகுவாக கற்பிக்க முடிவதோடு ஒரே நேரத்தில் பலதரப்பட்ட பாடவேலைகளை வழங்கக்கூடியதாகவும் உள்ளது. சமவயதுக் குழு மாணவர்கள் சிறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு கூட்டுக்கற்றலில் ஈடுபடுத்தக்கூடியதாக அமைகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் குழுக்களின் உறுப்பினர்களிடையே ஐக்கியம், ஊக்கம், அனைவருடனும் ஒற்றுமையுடன் செயற்படும் தன்மை என்பன அபிவிருத்தியடைகிறது.

வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் சமவயதுக் குழுக்கள் சகபாடி கற்பித்தலில் ஈடுபடுத்தக்கூடிய தன்மையும் காணப்படுகிறது. இங்கு ஒரு பிள்ளை மற்றைய பிள்ளைகளுக்கு பாட அறிவைப் பெற்றுக்கொடுப்பதில் பயிற்சியளிக்கின்றது. பயிற்சியை அளிக்கும் பிள்ளை குறித்த பாடத்தில் பாண்டித்தியம் அடைந்ததாகக் காணப்படுகிறது. ஒத்தவயதுடையவர்களாக பயிற்றுனரும் பயிலுனரும் இருப்பதால், பயிலுனர் வினாக்கள் கேட்பதிலும் அபிப்பிராயங்கள் கூறுவதிலும் விடைகளை ஊகித்துக் கூறுவதிலும் எவ்வித தயக்கமும் இல்லாமல் சுதந்திரமாக செயற்படுவர். பயிற்றுனரான மாணவன் சகபாடியாக விளங்கும் பொழுது, பயிற்றுனருக்கும் பயிலுனருக்குமிடையிலான இடைவினைத்தாக்கம் கூடிய அளவிற்கு சமநிலை பேணுவதாயும் உயிர்ப்பானதாயும் அமைகின்றது.

அதேசமயம், சமவயதினர் இணைந்த கற்றலில், ஈடுபடும் போது சிரமமான விடயங்களைக்கூட இவர்கள் கண்டுபிடித்துக் கற்கும் முறையை இது ஊக்குவிக்கிறது. அதேவேளை, சகபாடியின் உதவியையும் ஒத்தாசையையும் பெற இது வாய்பளிப்பதாக அமையும். கூடுதல் ஆதரவு தேவைப்படும் மாணவர்களுக்கு தனிப்பட்ட சக வழிகாட்டி நியமிக்கலாம். இது ஆதரவு தேவைப்படும் மாணவனை வெற்றிபெற உதவிசெய்யும். ஒரு பிள்ளை தன்னை ஒத்த மற்றொரு பிள்ளையுடன் சேர்ந்து வேலை செய்யும்போது, அறிவுக் குறைபாடுகளையோ தமது குறைபாடுகளையோ தமது குறைபாடுகளாகக் கொள்வதில்லை - அல்லது உணர்வதில்லை. பாடசாலைச் செயற்பாடுகளில் ஒன்றான கற்றல் செயற்பாடுகளை மேம்படுத்துவதில் சமவயதுக்குழுவினர் முக்கிய பங்கை ஆற்றுகின்றனர்.

பல்வேறு சக கற்றல் மாதிரிகளை பாடசாலைச் செயற்பாடுகளினூடாக சகபாடிகள் தாமாகவே கண்டறிந்து சுயமாக முன்னேறிக்கொள்கின்றனர். அடுத்து சகமதிப்பீட்டுத் திட்டங்கள், சக ஆதரவுக் குழுக்களால் கூட்டங்கள் பயனுள்ள முறையில் நடைபெறுவதுண்டு. பொதுவாக ஆசிரியர் இல்லாமல் வகுப்பிற்கு வெளியே மாணவர்களின் தலைமையில் நடாத்தப்படும் கூட்டங்கள் இவை. சோதனை ஒன்றிற்காக படிக்க அல்லது குழுத் திட்டமிடலுக்காக சகபாடிகள் சந்திக்கலாம். இங்கு ஒருவருக்குத் தெரியாதது இன்னொருவரால் கற்பிக்கவும் - கற்றுக்கொள்ளவும் படுகிறது. ஒவ்வொரு கற்பித்தலுக்கும் தகவல் பரிமாற்றத்திற்கும் இங்கு ஆழ்ந்த அறிவு தேவைப்படுகிறது.

ஆசிரியர்களிடம் பழகத் தயங்கும் மாணவர்கள் சகாக்களிடம் மனந்திறந்து பேசுவோராய் இருக்கும் பட்சத்தில் இவ்வாறான முறைகள் பாடசாலையில் காணப்படுவதனால் மாணவர்கள் தம்மைத்தாமே முன்னேற்றிக்கொள்கின்றனர். இங்கு பல்தரப்பட்ட பின்னனியில் இருந்து வருகைதரும் சமவயது மாணவர்கள் இவ்வாறு பாடசாலைகளில் ஒன்று சேர்வதால் சிந்தனைத்தாக்கத்தில் அதிக முன்னேற்றமும், அறிவுப்பகிரவும், தொடர்பாடல் திறனில் முன்னேற்றமும் கற்றலுக்கு உதவுவதாக அமைகின்றன.

பாடசாலைச் செயற்பாடுகளுள் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் உள்ளடங்கும் விளையாட்டுகள், விளையாட்டுப் போட்டிகள், தமிழ், ஆங்கில ஒலிம்பியாட் மற்றும் சமூக விஞ்ஞானம் போன்ற பல்வேறு வகையான போட்டிகள், மன்றங்கள் (மாணவர், தமிழ், ஆங்கில, சமய, விஞ்ஞான,வணிக மன்றங்கள்) பாடசாலை மேம்பாட்டு வேலைத்திட்டங்கள், களப்பயணங்கள். கல்விச் சுற்றுலாக்கள், மாணவர் பாராளுமன்றம், அயற்பாடசாலை நிகழ்ச்சிகள், விவாதங்கள் பொதுப்போட்டிகள், நல்லிணக்க செயற்பாடுகள், சாரணியம், சுகாதார சேவை. முதலுதவி, சுற்றாடல் படை போன்ற துணைச்சேவைகள் என பல செயற்பாடுகளில் சமவயது குழுக்களின் பங்களிப்பு பெறும் பகுதியாகக் காணப்படுகிறது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் சமவயதுக்குழுக்களை இனங்காண்பதும் - வழிநடத்துவதும் மிகவும் அவசியம்.

இவை பாடசாலையின் அபிவிருத்தியில் பங்கெடுப்பதோடு, தனிப்பட்ட ரீதியில் மாணவர்களின் முன்னேற்றத்திற்கும் ஆளுமை மற்றும் தலைமைத்துவ பண்பு போன்ற பல்தரப்பட்ட வளர்ச்சிக்கும் உதவுவதுண்டு. சுருக்கமாகக் கூறினால் அறிவு, திறன், மனப்பாங்கு வளர்ச்சிக்கு உதவுவதோடு அவர்களின் சிந்தனையையும் தூண்டுகின்றது.

களப்பயணம், விவாதம், அர்த்தமுள்ள உரையாடல்கள், கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள் என்பன பாடசாலைகளில் மிகவும் பொதுவானவை. இவ்வாறான தளத்தை பாடசாலை வழங்கும் பொழுது சமவயதினர் பங்கேற்பதால் சுதந்ததிரமாகவும், தடைகளின்றி வசதியாகவும் உணர்வதுண்டு. அர்த்தமுள்ளதாக இவை பயன்படுத்தப்படும் பொழுது நேரம் உற்பத்தித்திறன் மிகுந்ததாய் அமையும். ஆதலால் எதிர்காலப் பிரஜைகளான இவர்கள் சமூகத்திறனையும் அறிவையும் ஆழமாக வளர்ப்பதுடன் கூடுதலான நுணுக்கங்கள் மற்றும் முன்னோக்குகளைப் பெறுகின்றனர்.

பிள்ளைகள் சுதந்திரமும் சமத்துவமான உறவை வைத்துக்கொள்வதற்கும் முதலில் சந்தர்ப்பம் கிடைப்பது பாடசாலை சமவயது குழுவிலாகும். இங்கு சமநிலை உறவு வளர்ச்சி அடைவதுடன் பாலியல் தொடர்பான விடயங்களை அறியும் சத்தர்ப்பம் கிடைக்கிறது. சமூக இயல்பு பற்றி அதிக விளக்கம் இங்கு கிடைக்கிறது. பிள்ளைகளின் உள்ளம் இதனால் விரிவடைவதோடு, புலக்காட்சியும் விரிவடையும். பிள்ளைகளை பரந்த சமூக நோக்கின் அடிப்படையில் அவதானிக்கத் தூண்டுவதற்கு கலாசாரத்தை ஒப்படைக்கும் பணியும் பாடசாலையின் செயற்பாடுகளூடாக சமவயது குழுவால் நிறைவேற்றப்படும். பாடசாலைகளில் சமவயதுக் குழுக்களால் சமூக நடத்தை பற்றி குழந்தைகள் கற்றுக் கொள்கின்றனர். நேர்மறையான பக்கத்தில், நல்ல நண்பர்களை எவ்வாறு உருவாக்குவது மற்றும் வைத்திருப்பது, எவ்வாறு ஒன்று கூடி வேலை செய்வது, கற்றுக்கொள்வது, ஒன்றாக விளையாடுவது எவ்வாறு பேசுவது எவ்வாறு என்பதை சமவயதுக் குழுக்களின் தொடர்பு கற்றுக்கொடுக்கிறது.

உதாரணமாக, பாடசாலை எனும்போது பல்வேறு வகைப்பட்ட சமூகத்திலிருந்து வேறுபட்ட இன, மொழி மாணவர்கள் வருகைதருவதுண்டு. அங்கு அவர்கள் பல மாணவர்களுடன் சமூகமயமாக்கலுக்கு உட்படுவதுண்டு. பல்வேறு கலாசாரங்களைக் கற்பதும் உண்டு. மேலும் பலதரப்பினர் இருக்கும் பாடசாலைகளில் பல்வேறான நல்லிணக்க செயற்பாடுகள், அயற்பாடசாலைகளுடனான சமூக ஒருமைப்பாட்டு நிகழ்வுகள், சமய வழிபாடுகள், சரஸ்வதி பூஜை, வெசாக் பண்டிகை, மீலாதுன் விழா, பொங்கல் விழா, ஒளிவிழா போன்றன நடைபெறும் தருணங்களில் சமவயதினர் ஒவ்வொருவரினதும் கலாசாரப் பண்பாட்டு அம்சங்கள் குறித்து கற்பதோடு ஒற்றுமை, நல்லினக்கம் போன்ற நற்பண்புகளை எடுத்துச் செல்கின்றனர். இக்கலாசார பண்பாட்டு அம்சங்களை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச்செல்லும் கடமை மாணவர்களுக்கே இருப்பதனால் இவ்வாறான பாடசாலைச் செயற்பாடுகளிலிருந்து இவர்கள் அடுத்த தலைமுறையினருக்கு இதனை எடுத்துச் செல்லும் வாய்ப்பு ஏற்படுகின்றது. தேசியம், சமயம், சமூக வகுப்பு என்பனவற்றின் இயல்புகள், மூத்தவர்களின் கலாசாரம், ஏனைய கலாசாரம் பற்றிய விளக்கங்கள் இங்கு கிடைக்கின்றது.

இது எதிர்கால சந்ததிக்கும் எடுத்துச்செல்லக் கூடியதாக இருக்கிறது. வெவ்வேறு சமூக வகுப்பினர், சமூக அமைப்புகள் பற்றி அறிய முடிவதோடு. சமூக ஒருமைப்பாட்டிற்கு உதவுகின்றது. அடுக்கடுக்கான குழுக்கள் கூட்டுப்பணிகளில் ஈடுபடும் தறுவாயில் பலதரப்பட்ட விடயங்களைக் கற்க முற்படுகிறது. உதாரணமாக, மாணவர்கள் தாமாகத் தனிப்பட்ட தலைப்பொன்றைப்பற்றி அறிந்துகொள்ளவும் பின்னர் அதனை சக குழுவுடன் பகிரவும் ஊக்குவிக்கப்படலாம். அந்தக் குழு அதனை இன்னுமொரு குழுவிடம் பகிர்ந்துகொள்ளும், கூட்டுப்பணிகளில் ஈடுபடும் பொழுது தமக்காக நியமிக்கப்பட்ட பணிகளை பொறுப்பாகவும் ஒத்துழைப்புடனும் உரிய காலக்கெடுவில் முடிக்க வேண்டியதன் அவசியத்தைக் கற்றுக்கொள்கின்றனர்.



மாணவர்கள் தம்மைத்தாமே புதுப்பித்துக்கொள்ள சமவயதுக் குழுக்கள் பாடசாலையின் செயற்பாடுகளின் போது முக்கியத்துவம் பெறுகின்றன. உதாரணமாக, விவாதப்போட்டிகள், சமூகவியல், ஒலிம்பியாட், தமிழ் மற்றும் ஆங்கில தின விளையாட்டுப் போட்டிகளை எடுத்துக்கொண்டால் ஒவ்வொரு மாணவனினதும் திறமை இங்கு வெளிக்கொணரப்படுகிறது. இங்கு ஒரே வயதுமட்டக் குழுவினர்களுடன் போட்டிகளில் இவர்கள் முகங்கொடுக்க நேரிடுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் வெற்றி தோல்வியை மாணவர்கள் ஏற்கும் மனப்பாங்கை வளர்க்க ஏதுவாய் காணப்படுகிறது. புத்தாக்க சிந்தனையை அதிகரிக்கவும் அறிவு மற்றும் மன எல்லையை விரிவு படுத்தவும் தங்கள் கருத்துகளைப் பரிமாறவும் புதிய விடயங்களை கற்கவும் பாடசாலையில் சமவயதுக் குழுக்கள் அவசியமாகின்றன.

பாடசாலை விளையாட்டுப் போட்டிகள், வலய, மாகாண, அகில மட்ட விளையாட்டுப்போட்டிகள், சாரணர் இயக்கம் போன்ற நிகழ்வுகளின் மூலம் சமவயதுக்குழுக்களினால் பிள்ளைகள் குழுவாக செயற்படவும் ஒத்துழைக்க மற்றும் ஒன்றாக வேலை செய்ய அல்லது செயற்பட கற்றுக்கொள்கின்றனர். பாடசாலையின் மாணவத் தலைவர்களாக, வகுப்புத் தலைவர்களாக, மன்றங்கள் மற்றும் குழுக்களில் தலைமைதாங்கும் பொழுது அல்லது பொறுப்பேற்கும் பொழுது வேலைப்பகிர்வு கற்பிக்கப்படுகிறது. வழங்கப்படும் பொறுப்புகளை சமவயதினருடன் இணையும் தறுவாயில் பகிர்ந்தளித்து செயற்பட இயலுமானதாக ஆகின்றது. குறித்த பொறுப்புகளை அமுல்படுத்த சமவயதுக்குழுக்கள் ஆதரவளிக்கவும் உதவவும் முன்வரும்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் மனரீதியாக, உணர்ச்சி ரீதியாக சமவயதுக்குழுக்கள் இன்றியமையாதவர்களாகக் காணப்படுகின்றனர். இங்கு இவர்கள் தாம் பொறுப்பேற்று செயற்படும் பொழுது ஏற்படும் இடர்களுக்கு முகங்கொடுத்து, இடர்களைக் களைந்து, பிரச்சினைகளுக்கான தீர்வுகளைத் தாமாகவே குழுவாக முன்வந்து கண்டறிவதுண்டு. இங்கு இவர்கள் சிறந்த ஆளுமையுள்ள தலைமைத்துவம் வாய்ந்த தனிநபராக மாறுகின்ற எதிர்கால பிரஜைகளாக இருக்கபோகும் இவர்களுக்கு பாடசாலையினூடாக இவற்றைக் கற்றுக்கொள்ள வழங்கப்படும் இந்த வாய்ப்புகள் உறுதுணையாக அமையும். பாரபட்சம், ஒத்துழைப்பு மற்றும் சிக்கல்கள் தீர்க்கும் உத்திகள் மற்றும் முக்கியமான சமூக உணர்ச்சித்திறன்களை பிள்ளைகள் கற்கும் தனித்துவமான சூழலை சமவயதுக் குழுக்கள் வழங்குகின்றன.

சமவயதுக் குழுவினருக்கு அன்பு, கருணை, தைரியம், நம்பிக்கை, சகநோக்கு நிலை, சுறுசுறுப்பான பங்கேற்பு, பணிவு, பரஸ்பர மரியாதை, நன்றியுணர்வு போன்ற பண்புகளை சமவயதுக் குழுக்கள் பாடசாலைச் செயற்பாடுகளினூடாக பெற்றுக்கொள்கின்றன. மாணவர்களின் ஆர்வத்தையும் படைப்பாற்றலையும் வெளிக்கொணரவும் - பொறுப்புள்ள கற்றல் ஈடுபாடுடைய, தன்னம்பிக்கை, சுய ஒழுக்கம் மற்றும் மனவுறுதியுடன் கூடிய நல்லிணக்கத்துடன் செயற்படுவோரை உருவாக்கவும்- பண்புள்ள, கலாசார மற்றும் தார்மீக விழுமியங்களை எடுத்துச்செல்லும் நல்வழியில் நற்பண்புகளுடன் அமைந்த சிறந்த ஆளுமையுடன் கூடிய தலைமைத்துவம் வாய்ந்த சவால்களை எதிர்கொள்ளக்கூடிய வகையில் சமவயதுக் குழுக்கள் பாடசாலைச் செயற்பாடுகளில் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன.

மேலும் பாடசாலைச் செயற்பாடுகளில் சமவயதுக் குழுக்களூடாக ஆசிரியர்கள் தம்மைத்தாமே இற்றைப்படுத்திக் கொள்ளவும் முடிகிறது.

நவீன தொழில்நுட்பம் தொடர்பான அறிவு, அவற்றைப் பயன்படுத்தும் முறைகள் என்பனவற்றை சமவயதுக் குழுக்களிடம் ஆசிரியர்கள் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலைச் செயற்பாடுகளில் சமவயதுக் குழுக்கள் திட்டங்களை எளிதாக்கும் அல்லது குறைந்த மதிப்பிற்கு உட்படுத்தும் சக்திவாய்ந்த சக்திகளாக இருக்கின்றன. எனவே, பாடசாலையின் வளர்ச்சிக்கு சமவயதுக் குழுவானது பாரிய பங்களிப்பை வழங்கக்கூடிய பிரிவாக உள்ளது.

**தே.ஜீவன் பிரசாந்த்**
நான்காம் வருட
கல்வியியல் சிறப்பு கற்கை மாணவன்
கல்வி மற்றும் பிள்ளை நலத் துறை
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்

## நக்கல் நமசிவாயம்

அவனுகள் சந்திரனுக்கு போய்ட்டானுகள்.. நாம போற போக்கை பார்த்தா சனியிலதான் போய் நிப்பம் போல



# இன்றைய நாளில்...

- 708 – செப்பு நாணயம் முதன் முதலில் ஜப்பானில் வார்க்கப்பட்டது.
- 1498 – வாஸ்கோ ட காமா கோழிக்கோட்டில் இருந்து போர்த்துக்கல் திரும்ப முடிவு செய்தார்.
- 1658 – சீர்திருத்தத் திருச்சபை யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக ஒல்லாந்து மறைப்பரப்புனர் வண. பிலிப்ஸ் பால்டேயஸ் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1782 – திருகோணமலை கோட்டையை பிரான்சியர் பிரித்தானியரிடம் இருந்து மீளக் கைப்பற்றினர்.
- 1831 – மைக்கேல் பரடே மின்காந்தத் தூண்டலைக் கண்டுபிடித்தார்.
- 1885 – காட்லீப் டைம்லர் உலகின் முதலாவது உள் எரி பொறி விசையுந்துக்கான காப்புரிமத்தைப் பெற்றார்.
- 1898 – குட்இயர் டயர் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1915 – எஃப்-4 அமெரிக்காவின் விபத்துக்குள்ளான முதலாவது நீர்மூழ்கிக் கப்பல் ஆகும்.
- 1944 – அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் அமைக்கப்பட்டது.
- 1949 – சோவியத் ஒன்றியம் தனது ஜோ 1 என அழைக்கப்பட்ட முதலாவது அணுக்கரு ஆயுதத்தை கசகஸ்தானில் சோதித்தது.
- 1950 – கொரியப் போர்: பிரித்தானியப் படைகள் கொரியாவில் தரையிறங்கின.
- 1965 – ஜெமினி V விண்கலம் புவிக்குத் திரும்பியது.
- 1966 – எகிப்திய அரசுத்தலைவர் ஜமால் அப்துல் நாசிரக் கொலை செய்ய சதி செய்த குற்றத்துக்காக எகிப்திய சிந்தனையாளர் சய்யித் கூத்துப் தூக்கிலிடப்பட்டார்.
- 1966 – பீட்டில்ஸ் தமது கடைசி நிகழ்ச்சியை சான் பிரான்சிஸ்கோவில் நடத்தினர்.
- 1982 – செயற்கைத் தனிமம் மெய்ட்னீரியம் (அணு எண் 109) முதல் தடவையாக ஜேர்மனியில் தொகுக்கப்பட்டது.
- 1991 – சோவியத் ஒன்றியப் பொதுவுடைமைக் கட்சியின் அனைத்து நடவடிக்கைகளையும் சோவியத் உயர்பீடம் தடை செய்தது.

# விமான நிலையங்களை அண்மித்த பகுதிகளில் பட்டங்கள் ஏற்றத் தடை



இரத்மலானை, கட்டுநாயக்க மற்றும் மத்தள விமான நிலையங்களை அண்மித்த பகுதிகளில் பட்டங்களை பறக்கவிடுவதை தவிர்க்குமாறு விமான நிலைய அதிகாரசபை கேட்டுக்கொண்டுள்ளது.

பட்டங்கள் பறக்கவிடப்படுவதால் பயணிகள் விமானங்களுக்கு பாரிய ஆபத்தை ஏற்படுத்தக் கூடும் என்பதால் விமான நிலையங்கள் அண்மித்த பகுதிகளில் பட்டங்களை பறக்க விட வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

THE CEYLON AIR NAVIGATION REGULATIONS, 1955இன் பிரிவு 248இன் படி, ஒரு பட்டம் அல்லது ஏதேனும் வானப் பொருள் பறக்கவிடப்பட்டால், சிவில் விமானப் போக்குவரத்து ஆணையத்தின் எழுத்துப்பூர்வ ஒப்புதல் பெற வேண்டும்.

அதற்கமைய, 5 கிலோமீற்றர் சுற்றளவில் காற்றில் 300 அடி அல்லது அதற்கு மேற்பட்ட உயரத்தில் பட்டங்களை பறக்கவிடுவதும், ட்ரோன்களை பறக்கவிடுவதும் தடை செய்யப் பட்டுள்ளதாக விமான நிலைய ஆணையம் தெரிவித்துள்ளது.

பறக்கும் போது பட்டங்களை பறக்க பயன்படுத் தப்படும் தடிமனான நூல் வான்வெளிக்கு அச்சுறுத்தலாகும். இதனால் கட்டுநாயக்க, மத்தளை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய நகரங்களைச் சுற்றியுள்ள வானில் பட்டம் பறக்கவிடுவதைத் தவிர்க்குமாறு நிர்வாகம் அறிவித்தல் விடுத்துள்ளது.

விமான நிலைய அதிகார சபையானது பல பகுதிகளில் ஒலிபெருக்கிகளை பொருத்தி இது தொடர்பில் அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு சிறுவர்கள் மற்றும் இளைஞர்களின் பொழுதுபோக்காக இருக்கும் பட்டம் பறக்கவிடுவதற்கு எதிரானது அல்ல. விமானப் பயணிகளின் உயிராபத்தை கருத்தில் கொண்டு எடுக்கப்பட்ட முடிவு என்றும் ஆணையம் மேலும் தெரிவித்துள்ளது.

# சமனலவெவவை அண்மித்த பிரதேசங்களில் நீராடத் தடை

## பொலிஸார் எச்சரிக்கை

ஏ.ஏ.எம்.பாயிஸ்

பலாங்கொடையில் அமைந்துள்ள சமனலவெவ நீர்த்தேக்கத்தை அண்மித்த நீரேந்து பிரதேசங்களில் நீராடுவதற்கு நேற்று முதல் (28) முற்றாக தடை விதிக்கப்பட்டுள்ளதாக சமனலவெவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சமனலவெவ நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் குறைவடைந்துள்ள நிலையில் அதனால் ஏற்பட்டுள்ள நீர்க்கசிவை தடுப்பதற்கான திருத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் காரணமாக சமனலவெவவுக்கு கீழுள்ள நீர் நிலைகளில் நீராடுவதை தவிர்த்துகொள்ளுமாறு பொது மக்களிடம் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அதனால், இதன் கீழுள்ள நீர்வற்றியுள்ள சிறிய நீர் நிலைகளில் உள்நாட்டு சுற்றாடல் பயணிகள் நீராடுவதுடன் நடமாடுவதையும் தமது பொழுதுபோக்காகக் கொண்டுள்ளனர்.

இது ஒரு ஆபத்தான நிலையாகும். ஏனெனில் சமனலவெவ நீர்த்தேக்கத்தினர் நீர்க்கசிவை திருத்தும்போது நீர்த்தேக்கத்தில் தேங்கியுள்ள நீர் பள்ளத்தாக்கை நோக்கி பாயும் ஆபத்தான நிலை இருப்பதால் இவ் இடங்களில் நடமாடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# இலங்கையில் பிரமிட் திட்டத்தில் பணத்தை சுருட்டிய சீனக்கும்பல்

## நாடகமாடி சிக்கியது



பொரளை லேக் டிரைவ் வீதியில் அமைந்துள்ள தனது வீட்டுக்குள் சிலர் புகுந்து, தம்மை கட்டி வைத்து கொள்ளையடித்ததாக சீனப் பிரஜை ஒருவரின் முறைப்பாடு போலியானது என கொழும்பு தெற்கு பிரிவு குற்றப் புலனாய்வுப் பணியகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு துறைமுக நகரத்தில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக கூறிய 38 வயதான சீன வர்த்தகர், பிரமிட் மோசடிகள் மூலம் 40 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பணம் மற்றும் சொத்துகளை கொள்ளையிட்டுள்ளார்.

முறைப்பாட்டாளர், அவரது நண்பர் என இரு சீனப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சீனப் பிரஜை, ஏனைய சீனப் பிரஜைகள் குழுவுடன் இணைந்து இந்த நாட்டில் பிரமிட் திட்டத்தை மேற்கொண்டு வருவதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கசினோ சூதாட்டத்தில் ஈடுபட்டு பணத்தை இழந்ததை மறைப்பதற்காக இந்த சீன நபரே திட்டமிட்டு கொள்ளை நாடகத்தை அரங்கேற்றியதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

20ஆம் திகதி அவர் பொலிஸில் முறையிட்டிருந்தார். தனது 40 கோடி ரூபா மதிப்புள்ள சொத்துகளை கொள்ளையடித் துள்ளனர் என அதில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 19ஆம் திகதி வியாபார நிமித்தம் சென்று விட்டு நள்ளிரவில் வீடு திரும்பியதாக இந்த சீன பிரஜை பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். புகாரின்படி, அவர் தனது மொழிபெயர்ப்பாளருடன் ஊதா நிற கேடிஹெச் வாகனத்தில் வீட்டுக்கு வந்துள்ளார். வாகனத்தின் உரிமையாளரே தனது மொழிபெயர்ப்பாளர் மற்றும் சாரதி என சீன நபர் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

மொழிபெயர்ப்பாளருடன் வீட்டுக்குள் நுழைந்தபோது, வீட்டுக்குள் இருந்த முகமூடி அணிந்த மூன்று நபர்கள் தம்மைத் தாக்கி, கழுத்தில் வாளை வைத்து, கைகளைக் கட்டியதாக சீன வர்த்தகர் பொலிஸாரிடம் தெரிவித்தார். தான் துப்பாக்கி முனையில் கட்டப்பட்டதாக மொழி பெயர்ப்பாளர் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

அப்போது ஒருவர் தனது மொபைல் போனை எடுத்து சோதனை செய்ததாக சீன தொழிலதிபர், பொலிஸாரிடம் கூறினார். தொலைபேசி பூட்டப்பட்டிருந்ததால் கொள்ளையர்கள் தம்மை அச்சுறுத்தியதாகவும் அதனைத் திறக்கும்போது, தனது நண்பர் ஒருவருக்கு குறுஞ்செய்தி அனுப்பி, தான் சிக்கலில் இருப்பதாகவும் தெரிவித்ததாக சீனப் பிரஜை பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

செய்தி அனுப்பிய சிறிது நேரத்திலேயே வீட்டின் மணி அடித்ததையடுத்து வீட்டில் தங்கியிருந்த கொள்ளையர்கள் பீதியடைந்து வீட்டை விட்டு ஓடிவிட்டதாக அவர் பொலிஸாரிடம் தெரிவித்தார். மூன்று கொள்ளையர்களும் வீட்டின் முன்பக்கக் கதவைத் திறந்து தப்பிச் சென்றுள்ளதாகவும் அதே நேரத்தில் சீனப் பிரஜையின் நண்பர்களும் வீட்டுக்குள் நுழைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இது வழக்கத்துக்கு மாறான சம்பவம் என்பதால் இது குறித்து முதல் சந்தேகம் எழுந்ததாக மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இரண்டு நண்பர்கள் வீட்டுக்கு வந்ததாகவும் அவர்கள் தனது மற்றும் மொழிபெயர்ப்பாளரின் கைகளை அவிழ்த்ததாகவும் சீன நாட்டவர் பொலிஸாரிடம் கூறினார். வீட்டைச் சோதனையிட்டபோது, கொள்ளையர்கள் தமது வாகனத்தில் தப்பிச் சென்றதையும் சமையல்காரர் கை, வாய் கட்டப்பட்டு வீட்டின் உள்பக்கமாக அடைக்கப்பட்டிருந்ததையும் கண்டதாக கூறியுள்ளார்.

23.8 மில்லியனுக்கும் அதிக பெறுமதியான அமெரிக்க டொலர்கள், யுவான், தாய்லாந்து நாணயம், ஹொங்கொங் டொலர்கள், திர்ஹாம்கள் மற்றும் இலங்கை ரூபா என்பவற்றையும் கொள்ளையர்கள் எடுத்துச் சென்றுள்ளதாக சீனப் பிரஜை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். அதுமட்டுமன்றி 11 கையடக்கத் தொலைபேசிகள், 07 மடிக்கணினிகள், ஐந்து வெளிநாட்டு மதுபான போத்தல்கள், அர்மானி கைக்கடிகாரம், பெறுமதியான இடுப்புப் பட்டை மற்றும் வாகனம் என்பன கொள்ளையிடப்பட்ட ஏனைய பொருட்களில் அடங்கும். அந்த சொத்துகளின் மதிப்பு 17.7 மில்லியன் ரூபா.

கெமரா அமைப்பு இருந்தாலும், பாதுகாப்பு கெமரா காட்சிகளை சேமித்து வைத்திருக்கும் டி.வி.ஆரும் கொள்ளையர்களால் திருடப்பட்டுள்ளதாக சீன நாட்டவர் புகார் அளித்துள்ளார்.

இந்த சீனப் பிரஜைகள் தங்கியிருந்த வீடு 70 மில்லியன் ரூபாவுக்கு வாடகைக்கு விடப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது. இந்த வீட்டில் இருந்தே இந்த மோசடி நடந்துள்ளது. பொலிஸார் அந்த வீட்டை சோதனையிட்ட போது, பிரமிட் திட்டத்தில் ஈடுபட்ட சீன பிரஜைகள் கும்பல் தப்பிச்சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சீனப் பிரஜைகள் ஒரு வருடத்துக்கும் மேலாக இந்த நாட்டில் தங்கியிருந்து இந்த சர்வதேச பிரமிட் திட்டத்தை ஒன்லைனில் நடத்தி வருவதாகவும் தெரியவந்துள்ளது. இதற்காக பயன்படுத்தப்பட்ட பல மடிக்கணினிகளையும் பொலிஸார் கண்டுபிடித்தனர். சோதனையின் போது, அங்கு தங்கியிருந்த சுமார் 15 சீனப் பிரஜைகள் தப்பிச் சென்றுள்ளனர். இந்த மோசடியில் பயன்படுத்தப்பட்ட சுமார் 40 மடிக்கணினிகளை அவர்கள் எடுத்துச் சென்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

விசாரணையில், வாகன சாரதியாகவும் மொழிபெயர்ப்பாளராகவும் செயற்பட்ட நபருக்கு திட்டத்தை செயல்படுத்த ரூ.1.5 மில்லியன் வழங்கப்பட்டது தெரிய வந்தது.

இந்த நபர் கொழும்பு துறைமுக நகரத்தில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சீனப் பிரஜையுடன் பிரமிட் திட்டத்தில் ஈடுபட்ட சந்தேகநபர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்த சீனப் பிரஜைகள் இலங்கைக்கு சட்டவிரோதமான முறையில் சிகரெட் கடத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. அவர்களிடம் இருந்து முப்பதாயிரம் சிகரெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

கொழும்பில் உள்ள சொகுசு அடுக்குமாடி குடியிருப்புகளில் ஏழு வீடுகளையும் இவர்கள் வாங்கியுள்ளதாக தெரியவந்துள்ளது.

# யாழ் மாவட்டத்தில் 70,408 பேரைக் கொண்ட 22,044 குடும்பங்கள் வறட்சியால் பாதிப்பு

பு.கஜிந்தன்

யாழ்ப்பாண மாவட்டத்தில் 70 ஆயிரத்து 408 பேர்களைக் கொண்ட 22ஆயிரத்து44 குடும்பங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருப்பதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவற்றில் நெடுந்தீவு, ஊர் காவற்றுறை, மருதங்கேணி, சங்கானை மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலகப் பிரிவுகளில் குடிநீர்ப் பற்றாக்குறையான பகுதிகளுக்கு தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் நிதி உதவியுடன் பவுசர்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

தற்போதைய நிலை தொடர்ந்து நீடிக்கும் பட்சத்தில் குடிநீர்த் தேவையுடைய குடும்பங்களின் தொகை அதிகரிக்கக்கூடும் எனவும் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டுமெனவும் அண்மையில் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இடம் பெற்ற கூட்டத்தில் பிரதேச செயலாளர்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதன்போது நெடுந்தீவு உட்பட தங்களால் நீர்வழங்கல் செய்யப்படும் பிரதேசங்களுக்கு குடிநீர்த் தட்டுப்பாட்டை சமாளிக்கக் கூடிய வகையில் நீர்வழங்கலை மேற்கொள்ள முடியுமெனவும் தற்போது மாவட்டத்தில் அவ்வாறான சேவைகள் 18 குடிநீர் மூலங்கள் மூலமாக செயற்படுவதாகவும் நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை பொறியியலாளர் தெரிவித்தார்.

அதேவேளை, எதிர்வரும் கால வறட்சியினை கருத்திற்கொண்டு நீர்ப் பாவனையின் விரயத்தைத் தவிர்த்து சிக்கனமாக நீரைப் பாவிக்க பொது மக்களுக்கு அறிவுறுத்த வேண்டுமெனவும் தெரிவிக்கப் பட்டது.

# குருநாகல் தௌஹீத் அஸ்ஸலபிய்யா கலாபீடம் விரைவில் திறக்கப்படும்

குருநாகல், பறகஹதெனியவில் இயங்கிவரும் தாருத் தௌஹீத் அஸ்ஸலபிய்யா கலாபீடம் மிக நீண்ட இடைவெளிக்குப்பிறகு மீண்டும் இயங்கவுள்ளது.

கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகள் மூடப்பட்டிருந்த இக்கலாபீடம், மீண்டும் தனது கல்வி நடவடிக்கைகளை வெகு விரைவில் ஆரம்பிக்கவுள்ளது. இதற்கான முழு ஆயத்த நடவடிக்கைகளும் மிகத்துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

ஈஸ்டர் குண்டுத்தாக்குதலைத் தொடர்ந்து, தடைப்பட்டிருந்த இதன் கல்வி நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதனைக் கருத்திற்கொண்டு அஸ்ஸலபிய்யாவின் பழைய மாணவர்கள் அமைப்பினால் சிரமதான நிகழ்வொன்றும் கலந்துரையாடலொன்றும் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நாட்டின் நாலாபுறத்திலிருந்தும் வருகை தந்திருந்த ஸலபிகள் பலர் இதில் கலந்துகொண்டனர்.



கல்லூரியின் பணிப்பாளர் அஷ்-ஷெய்க் என்.பி.எம்.அபூபக்கர் சித்தீக் மதனி கல்லூரியின் செயலாளர் ஏ.எல்.கலீலுர்ரஹ்மான், எம்.ஏ.பழைய மாணவர்கள் அமைப்பின் தலைவர் அஷ்-ஷெய்க் இஸ்மாயீல் ஸலபி, பிரதித்தலைவர் அஷ்-ஷெய்க் எம்.எம்.தௌபீக், மதனி அமைப்பின் செயலாளர் நிகாஸ் மஸ்ரின், பழைய மாணவர்கள் அமைப்பின் முக்கியஸ்தர் கலாநிதி அம்ஜத் ராஸிக் மதனி உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த பழைய மாணவர்கள் அமைப்பின் தலைவர் அஷ்-ஷெய்க் இஸ்மாயீல் ஸலபி, இக்கலாபீடத்தின் கல்வி நடவடிக்கைகள் மீண்டும் வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் இதற்கான சூழலை ஏற்படுத்தித்தந்த எல்லாம் வல்ல இறைவனுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவிப்பதோடு இதற்கான ஒத்தாசைகளை வழங்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நன்றி தெரிவித்தார்.

# மீளக் கையளிக்கப்படாத 700 துப்பாக்கிகள் நாட்டில்

## முக்கிய தகவல் வெளியானது

1980ஆம் ஆண்டுமுதல் 1990ஆம் ஆண்டுவரை அரசியல்வாதிகளுக்கு வழங்கப்பட்ட 700 துப்பாக்கிகள் மீளக் கொடுக்கப்படவில்லை என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த 10 வருட காலப்பகுதியில் 154 அரசியல்வாதிகளுக்கு 698 துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அலகப்பெரும எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் வகையில், அரசியல்வாதிகளின் பட்டியலும் அவர்கள் திரும்பிச் செல்லத் தவறிய ஆயுதங்களும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோனினால் இந்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த ஆவணங்களின்படி, துப்பாக்கிகள் பெரும்பாலும் 9எம்எம் பிஸ்டல்கள், ரிவோல்வர்கள் மற்றும் 12 போர் சொட்கன்கள் சில அரசியல்வாதிகளுக்கு அந்தந்த கட்சிகள் உட்பட பல்வேறு சந்தர்ப்பங்களில் பல துப்பாக்கிகள் வழங்கப்பட்டன. தங்களுக்கு வழங்கப்பட்ட துப்பாக்கிகளை திருப்பிக் கொடுக்கத் தவறிய சிலர் தற்போது உயிரிழந்துள்ளனர்.

இராஜாங்க அமைச்சர் தென்னகோன் பாராளுமன்றத்தில் தெரிவித்ததாவது, இந்த துப்பாக்கிகள் எதற்காக வழங்கப்பட்டன என்பதை குறிப்பிடுவதற்கு பாதுகாப்பு அமைச்சிடம் எந்த ஆவணங்களும் இல்லை. ஆனால், 1980-1990 காலப்பகுதியில் நாட்டில் நிலவிய சூழ்நிலையின் காரணமாக இது அரசியல்வாதிகளின் பாதுகாப்புக்காக இருக்கலாம்.

அலகப்பெரும எழுப்பிய மற்றுமொரு கேள்விக்கு பதிலளித்த இராஜாங்க அமைச்சர், 1990ஆம் ஆண்டு முதல் 2023ஆம் ஆண்டு வரை அரசியல்வாதிகளுக்கு பாதுகாப்பு அமைச்சு எந்த தானியங்கி துப்பாக்கிகளையும் வழங்கவில்லை என்று கூறினார்.

# பொலிஸ் வேடத்தில் நால்வர் கந்தானையில் கொள்ளை

கந்தானை பகுதியிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றுக்கு அருகில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் போன்று வேடமணிந்த நால்வர், ஒருவரின் மோட்டார் சைக்கிள் மற்றும் கைத்தொலைபேசியை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக கந்தானை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொள்ளையிடப்பட்டவற்றின் பெறுமதி 3,50,000 ரூபா என கந்தானை பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜா -எல பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய ஒருவரே இவ்வாறு பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.



சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாத சுவாமி ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தில் ஞாயிற்றுக்கிழமை (27) நடேசர் உற்சவம் இடம்பெற்றது. இதன்போது பக்தர்கள், அடியார்கள் பலர் கலந்து கொண்டனர்.

படம்: உடப்பு நிருபர்



மன்னார், முசலி வை.எம்.எம்.ஏ. கிளையின் ஏற்பாட்டில், பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடைபெற்ற போட்டி நிகழ்வில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா சனிக்கிழமை (26) முசலி தேசிய பாடசாலை கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (28.08.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 202.6805 | 213.8403 |
| கனேடியன் டொலர் | 232.4904 | 244.0570 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 42.8949 | 45.8551 |
| யூரோ | 341.9833 | 358.1514 |
| ஜப்பான் யென் | 2.1638 | 2.2612 |
| சிங்கப்பூர் டொலர் | 233.1818 | 244.7376 |
| ஸ்ரேலிங் பவுன் | 399.2494 | 416.7778 |
| சுவிஸ் பிராங் | 356.7582 | 376.1529 |
| ஐ.அ. டொலர் | 317.9628 | 329.5226 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 859.0981 |
| குவைட் | குவைட் தினார் | 1,049.4861 |
| ஓமான் | ஓமான் றியால் | 841.2572 |
| கட்டார் | கட்டார் றியால் | 88.8536 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 86.3945 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 88.1739 |

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிற்றுக்கிழமை 2023.08.27
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5219
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 22,199,160.00
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 8 8 7 3 1 3

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3461
சீட்டிழுப்பு திகதி 2023.08.27
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 60,790,442.00
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 02 63 67 76
விசேட எழுத்து R
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 15119

Lucky 7
திகதி 27.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0045
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 8 6 1 8 4 4
L7 இலக்கம் 1 1
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,252,893.04

தன நிதானய
தேதி 2023/08/27
சீட்டிழுப்பு இலக்கம் 1249
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 106,660,536.80
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 01 30 41 76
விஷேட ஆங்கில எழுத்து Z
Double Chance இலக்கம் 28035

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 528
சீட்டிழுப்பு திகதி 2023-08-27
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,599,828.80
வெற்றி இலக்கினம் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 21 39 45 47
விசேட இலக்கினம் விருச்சிகம்

Mega Power
சீட்டிழுப்பு இலக்கம் 1567
27/08/2023
34146
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.405,712,080.00
ஆங்கில எழுத்து U
சுப்பர் இலக்கம் 05
வெற்றி இலக்கங்கள் 08 17 35 74
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# எட்டியாந்தோட்டை மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படும்

## சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க





இரத்தினபுரி செய்தியாளர்

எட்டியாந்தோட்டை தேர்தல் தொகுதியில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க தெரிவித்தார்.

எட்டியாந்தோட்டை தேர்தல் தொகுதி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து வெள்ளிக்கிழமை (25) நேரடியாக சென்று கேட்டறிந்து அவர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

101 வருடங்கள் பழைமைவாய்ந்த எட்டியாந்தோட்டை கராகொட பாலத்தை முழுமையாக புனரமைக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து 500 மில்லியன் ரூபா நிதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி பாலத்தின் அபிவிருத்திப் பணிகளை செப்டெம்பர் மாதம் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், கித்துல்கல கிராமத்தின் வீதியையும் அபிவிருத்தி செய்வதற்கு 15 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் அபிவிருத்திப் பணிகளும் விரைவில் ஆரம்பிக்கப்படும் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதன்போது நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, பாராளுமன்ற உறுப்பினர் ராஜிகா விக்கிரமசிங்க உட்பட முக்கிய அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# போலி ஆவணங்கள் தயாரித்த குற்றச்சாட்டில் இருவர் கைது

மஸ்கெலியா செய்தியாளர்

போலி ஆவணங்களைத் தயாரித்து விநியோகித்த குற்றச்சாட்டின்கீழ், நுவரெலியாவில் இளைஞனும் யுவதியும் ஞாயிற்றுக்கிழமை (27) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

போலியான ஆவணங்கள் பலவற்றை தயாரித்துக்கொண்டு காரொன்றில் இருவர் நுவரெலியாவுக்கு வருவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகத்துக்கிடமான குறித்த காரை நிறுத்தி சோதனையிட்டனர்.

அதில் பயணித்த இருவரிடமும் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து போலியாக தயாரிக்கப்பட்ட வாகனப் பதிவு சான்றிதழ்-03, வருமான வரி ஆவணம்-03, காப்புறுதி சான்றிதழ்-03, நிதி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட தவணைக்கட்டணம் கட்டி முடிக்கப்பட்டமைக்கான ஆவணம்-03, வாகனத்தை ஒப்படைப்பதற்கு எவ்விதமான எதிர்ப்பு இல்லையென அத்தாட்சிப் படுத்தப்பட்ட ஆவணங்கள்-03, வாகன இலக்கத் தகடு இல்லையென பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பிலான 3 பிரதிகள், தேசிய அடையாள அட்டைகள்-03, தற்காலிக வாகன அத்தாட்சிப்பத்திரம் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன.

நாகுளுகமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதான இளைஞனும், ஹிங்குரான்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதான யுவதியும் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் முச்சக்கரவண்டி பதிவு புத்தகத்தை தயாரித்து தருவதாகக் கூறி பேராதனை பொலிஸ் பிரிவில் வசிக்கும் நபர் ஒருவரிடமிருந்து ஒரு இலட்சத்து 80ஆயிரம் ரூபா மோசடி செய்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த மோசடி தொடர்பில் பேராதனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் செய்யப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்த வயோதிபர்

## பசறையில் விசாரணைகள் முன்னெடுப்பு

ராமு தனராஜா

பசறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 13ஆம் கட்டை லுணுபிஸ்ஸபதன பிரதேசத்திலுள்ள வீடொன்றில் ஞாயிற்றுக்கிழமை (27) மாலை சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்த வயோதிபரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் வீட்டில் தனியாக வசித்து வந்த 71 வயதுடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நபர் ஒருவரின் வீட்டுக்கு நீர் வராததால் மரணித்த நபரின் வீட்டுக்கு மேலே உள்ள நீரூற்றிலிருந்து வரும் நீர்க்குழாயை திருத்துவதற்கு சென்றபோது வீட்டுக்கு வெளியே காய்கறிகள் மற்றும் ஊதுபத்தி பக்கெட்டு, மரணித்த நபரின் செருப்பு, மூக்குக்கண்ணாடி, தொப்பி, கையடக்கத் தொலைபேசியின் பின் பகுதி ஆகியன வீட்டுக்கு வெளியே கிடந்ததை அவதானித்த நபர் சந்தேகம் கொண்டு கதவை திறந்து உள்ளே சென்றபோது குறித்த நபர் கட்டிலில் கிடப்பதை அவதானித்துள்ளார்.

அதனையடுத்து, குறித்த நபர் பசறை பொலிஸ் நிலையத்துக்கு தொலைபேசியினூடாக அறிவித்துள்ளார். இதன்போது குறித்த வீட்டுக்கு விரைந்த பசறை பொலிஸார், பரிசோதித்தபோது குறித்த நபர் உயிரிழந்துள்ளதாக தெரிவித்தனர். நீதவான் பார்வையிடுவதற்காக சடலம் அவ்விடத்திலேயே வைக்கப்பட்டதுடன், மேலதிக விசாரணைகளை பசறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# வரகாதெனியவில் பட்டம் விடும் விழா

ஏ.ஏ.எம்.பாயிஸ்

வரகாதெனிய இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் பிரதேச சிறுவர்களுக்கான பட்டம் விடும் விழா கொண்டாட்டம் எதிர்வரும் செப்டெம்பர் 9ஆம் திகதி நடத்தப்படவுள்ளது.

வரகாதெனிய வயல்வெளியில் காலை 09 மணிக்கு இதனை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஏற்பாட்டுக்குழுவினர் அறிவித்துள்ளனர்.

இக்கொண்டாட்டத்தில் கலந்துகொள்வோர் தமது பட்டங்களுடன் உரிய இடத்துக்கு வருமாறும் கலந்துகொள்வோரின் மிகப் பெரிய பட்டம், மிகச் சிறிய பட்டம், அழகான பட்டம், கலை அம்சம் பொருந்திய பட்டம், தொழில்நுட்பம் சார்ந்த பட்டம் ஆகியவற்றுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இக்கொண்டாட்டத்தில் பட்டங்களுடன் கலந்துகொள்ளும் அனைத்து சிறுவர்களுக்கும் நினைவுப் பரிசு வழங்கவும் ஏற்பாட்டுக் குழுவினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புலி நடமாட்டத்தால் கிராம மக்கள் பீதியில்

மஸ்கெலியா செய்தியாளர்

நோட்டன் பொலிஸ் பிரிவிலுள்ள கிரிவன்நெலிய கிராம மக்கள் மாலை 06 மணிக்கு மேல் வெளியே நடமாட முடியாத நிலையில் புலி நடமாட்டம் அதிகரி த்துள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும், வீடுகளிலுள்ள தங்களது வளர்ப்பு நாய்கள் உள்ளிட்ட செல்லப்பிராணிகள் அனைத்தையும் பிடித்து சென்று விட்டதாக தெரிவிக்கும் பிரதேசவாசிகள் அப் பகுதி வனப் பகுதியாக உள்ளதால் அதிகளவில் புலி நடமாட்டம் உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து வனப் பாதுகாப்பு அதிகாரி கள் உடன் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரி க்கை விடுக்கின்றனர்.



**சிவனொளிபாதமலைத் தொடர் வனப் பகுதியில் அமைந்துள்ள மொக்கா தோட்டத்துக்கருகிலுள்ள வனத்துக்கு ஞாயிற்றுக்கிழமை(27) மாலை விஷமிகளால் தீ வைத்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதனால் சுமார் 06 ஹெக்டேயர் வனப் பகுதி எரிந்து நாசமாகியுள்ளதாக தெரிவிக்கும் மஸ்கெலியா பொலிஸார், தங்களது முயற்சியால் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளதாகவும் தெரிவித்தனர்.**

**படம்: மஸ்கெலியா செய்தியாளர்**






**உக்குவளை தாருல் ஹிக்மா பாலர் பாடசாலையின் 14ஆவது மாணவ சிறார்களது சித்திரக் கண்காட்சியும் சான்றுகள் வழங்கும் நிகழ்வும் பாடசாலை அதிபர் என்.எப்.சர்மிலா தலைமையில் நடைபெற்றது. இதன்போது உக்குவளை அஹதிய்யா பாடசாலை அதிபர் எஸ்.ஹலீம்தீன், முன்னாள் ஆசிரியர் எம்.நியாஸ் மற்றும் பிரமுகர்கள், பெற்றோர்கள் கலந்துகொண்டதுடன் கண்காட்சிக்காக சித்திரங்கள் வரைந்த மாணவச் சிறார்களுக்கு பிரமுகர்கள் சான்றிதழும் வழங்கினர்.**

**படங்கள்: உக்குவளை செய்தியாளர்**

# பாடல் போட்டி எனும் பெயரில் பல இலட்சம் ரூபா பணமோசடி

மன்னார் நகர் செய்தியாளர்



இலங்கை முழுவதும் உள்ள பாடகர்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதாகக் கூறி எவரஸ்ட் எப்.எம்.என்ற பதிவுசெய்யப்படாத நிறுவனம் ஒன்று முகநூல் ஊடாக பாடல் போட்டி தெரிவை நடத்தி ஞாயிற்றுக்கிழமை (27) இறுதிப் போட்டி என்று அழைத்து பல இலட்சம் ரூபா வசூல் செய்து போட்டியாளர்களை ஏமாற்றியுள்ளது.

மன்னார் மாவட்டத்திலிருந்து மாத்திரமல்லாமல் இலங்கையின் பல பகுதிகளிலிருந்தும் குறிப்பாக வவுனியா, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கண்டி, நுவரெலியா, கொழும்பு, மாத்தளை என இலங்கையின் பெரும்பாலான மாவட்டங்களிலிருந்தும் குறித்த போட்டியில் தமது திறமைகளை வெளிக்காட்டுவதற்கு வருகை தந்திருந்தனர்.

மூன்று மாதங்களாக குறித்த போட்டியை பதிவு செய்யப்படாத வானொலி ஒன்றின் பெயரின் ஊடாக விளம்பரப்படுத்தி தென்னிந்தியாவிலிருந்து பாடகர்கள் நடுவர்களாக கலந்துகொள்வதாக தெரிவித்தும் பல இலட்சம் பெறுமதியான பரிசில்கள் இருப்பதாக தெரிவித்தும் கலந்துகொள்பவர்களிடம் ஆயிரத்து 750 ரூபா வீதம் வங்கிக் கணக்கில் வைப்பிலிடுமாறு குறித்த குழுவால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர், ஆரம்பகட்ட பண வசூல் இடம்பெற்றுள்ளது. ஞாயிற்றுக்கிழமையன்று இறுதிப் போட்டியில் கலந்துகொண்டவர்களிடம் ஆயிரத்து 750 ரூபாவும் மற்றும் பார்வையாளர்களிடம் 400 ரூபாவும் வசூல் செய்து மண்டபத்துக்குள் அனுமதி வழங்கியிருந்தனர்.

சுமார் 1000க்கும் மேற்பட்டவர்கள் பணம் செலுத்தி குறித்த நிகழ்ச்சியை பார்வையிடுவதற்காக காத்திருந்தனர். 08 மணிக்கு ஆரம்பிப்பதாக அறிவித்த போட்டிகள் 11 மணியளவிலேயே ஆரம்பித்ததாகவும் இசைக்கு சம்பந்தமே இல்லாதவர்கள் நடுவர்களாக கலந்துகொண்டதாகவும் குறிப்பாக மன்னார் நானாட்டான் பிரதேச செயலகத்தில் நடனத்துடன் சம்பந்தப்பட்ட கலாசார உத்தியோகத்தர் ஒருவரும் யார் என்றே தெரியாத மூவரும் நடுவர்களாக கலந்துகொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பல முறை நிகழ்ச்சியின் இடைநடுவே முரண்பாடுகள் ஏற்பட்டுவந்த நிலையில் குண்டர்கள் சிலர் போட்டியாளர்களை மிரட்டி அமர வைத்துள்ளனர். ஏமாற்றப்பட்ட விடயம் அறிந்த போட்டியாளர்கள் மன்னார் பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கிய நிலையில் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகை தந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இருப்பினும், குறித்த தினத்தில் போட்டி ஒழுங்கான முறையில் இடம்பெறவில்லை என்பதுடன் வெற்றியாளர்களும் தெரிவுசெய்யப்படவில்லை. போட்டியின் உண்மைத் தன்மை அறியாது இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பல நூறு போட்டியாளர்கள் கலந்துகொண்டு பணத்தை இழந்துள்ளனர்.

குறிப்பாக, முன்னதாகவே பல வெற்றிகளைப் பெற்ற திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த மாணவி ஒருவரை இப்போட்டியில் பாடவைப்பதற்காக ஒரு கிராமமே பஸ் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி ஒரு இலட்சத்துக்கும் மேல் செலவு செய்து இந்த நிகழ்ச்சிக்கு வந்து ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# சைவப்புலவர் சங்கத்தின் ஏற்பாட்டில் சொற்பொழிவு





சாவகச்சேரி செய்தியாளர்

நல்லைக்கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஞாயிற்றுக்கிழமை 7ஆம் திருவிழா தினத்தன்று இரவு சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வு இடம்பெற்றது.

நல்லூர் ஆலய வீதியின் ஈசான மூலையில் அமைந்துள்ள அருள்மிகு மனோன்மணி அம்பாள் ஆலய மண்டபத்தில் சைவப்புலவர் சி.கா.கமலநாதன் தலைமையில் இடம்பெற்ற சொற்பொழிவு நிகழ்வில் "குருவாய் வருவாய்" எனும் தலைப்பில் இளஞ்சைவப்புலவர் க.கைலநாதன் சொற்பொழிவாற்றினார்.

சொற்பொழிவைத் தொடர்ந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு சரியாக பதிலளித்த மாணவர்களுக்கு சங்கத்தால் பரிசில்களும் வழங்கப்பட்டன.



**தென்மராட்சி, நாவற்குழி அருள்மிகு சித்திவிநாயகர் ஆலயத்தில் மாம்பழம் ஒன்று ஒரு இலட்சத்து 70ஆயிரம் ரூபாவுக்கு ஏலத்தில் பெறப்பட்டுள்ளது. ஆலயத்தின் மாம்பழத் திருவிழா தினமான ஞாயிற்றுக்கிழமை (27), பிள்ளையாரின் திருவடிகளில் வைக்கப்பட்ட மாம்பழமே இவ்வாறு கார்த்திகேசு சிவகுமார் குடும்பத்தினரால் ஏலத்தில் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.**

**படம்: சாவகச்சேரி செய்தியாளர்**

# ஒன்றுகூடலில் நடனமாடியவர் மயங்கி விழுந்து உயிரிழப்பு

யாழ். செய்தியாளர்

பழைய மாணவர் ஒன்றுகூடலில் நடனமாடிக்கொண்டிருந்த கனடாவைச் சேர்ந்தவர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

தெல்லிப்பழை மகாஜன கல்லூரி பழைய மாணவர் ஒன்றுகூடல் கடந்த சனிக்கிழமை (26) தெல்லிப்பழை பகுதியிலுள்ள தனியார் மண்டபம் ஒன்றில் இடம்பெற்றது. அதன்போது பாடல் ஒன்றுக்கு நடனமாடிக்கொண்டிருந்தவர் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், மல்லாகம் பகுதியை சொந்த இடமாகக்கொண்டவரும் தற்போது புலம்பெயர்ந்து கனடாவில் வசித்து வருபவருமான நாகராஜா சசிதரன் (வயது 61) என்பவரே உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# 07இலட்சம் ரூபா பெறுமதியான தேக்கு மரக்குற்றிகள் மீட்பு

## மீசாலையில் இலஞ்சம் கொடுக்க முற்பட்டபோது சாரதி கைது

சாவகச்சேரி செய்தியாளர்



சாவகச்சேரி பொலிஸாரின் அதிரடி நடவடிக்கை மூலமாக மீசாலைப் பகுதியில் வைத்து 7 இலட்சம் ரூபா பெறுமதியான தேக்கு மரக்குற்றிகள் மீட்கப்பட்டுள்ளன.

கனகராயன்குளம் பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி ரிப்பர் வாகனத்தில் கருங்கல் கிரவலுக்குள் மறைத்து எடுத்துவரப்பட்ட 22 தேக்கு மரக்குற்றிகளே இவ்வாறு திங்கட்கிழமை (28) காலை கைப்பற்றப்பட்டுள்ளதுடன், வாகனச் சாரதியும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மீசாலை பகுதியில் கடமையில் நின்றிருந்த போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸாரே குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர். இதன்போது சந்தேக நபர் பொலிஸாருக்கு 5 இலட்சம் ரூபா இலஞ்சம் வழங்க முற்பட்ட போது கைது நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையிலான பொலிஸ் குழுவினரே குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத் திருந்தனர்.

கைதான சந்தேக நபர் செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என பொலிஸார் தெரிவித்தனர்.



**யாழ்ப்பாணம், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த் திருவிழா திங்கட்கிழமை (28) இடம்பெற்றது. அதிகாலை தேர்த் திருவிழாவுக்கான கிரியைகள் ஆரம்பமாகி காலை 7.30 மணியளவில் வசந்தமண்டப பூஜை இடம்பெற்றதைத் தொடர்ந்து துர்க்கையம்மன் சித்திரத் தேரில் எழுந்தருளினார். இதன்போது பலரும் தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றும் பொருட்டு விசேட வழிபாடுகளில் ஈடுபட்டனர்.**

**படங்கள்:** யாழ்.செய்தியாளர்

உலக செய்திகள்



# இன்னும் 9 நாட்களில் இருளடையவுள்ள நிலவு

## விக்ரமின் நிலை என்னவாகும்?

நிலவில் சந்திரயான்-3இன் விக்ரம் லேண்டர் மற்றும் பிரக்யான் ரோவர் ஆகியன இணைந்து பல்வேறு கட்ட ஆய்வுப் பணிகளை முன்னெடுத்து வருகின்றன. ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதற்கு இன்னும் இருப்பது 9 நாட்கள் மட்டுமே. இந்நிலையில், பிரக்யான் ரோவர், நிலவின் பரப்பிலிருந்த முதல் சவாலை வெற்றிகரமாக சமாளித்துள்ளதென தெரியவந்துள்ளது.

**14 நாட்களுக்குப் பின் ரோவர் செயற்படுமா?**

14 நாட்களுக்குப் பின்னர் அடுத்த இரு வாரங்கள் நிலவில் முழு இருட்டாக இருக்கும். இந்த நாட்களில் வெப்பநிலை பூஜ்ஜியத்துக்கு கீழே 135 டிகிரி வரை சென்றுவிடும். இந்த மிகவும் தாழ்ந்த வெப்பநிலையில் சந்திரயானின் ரோவர் பாகங்கள் செயற்படுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். இருட்டான நாட்கள் வரத்தொடங்கியவுடன் சந்திரயானின் பாகங்கள் அனைத்தும் 'ஸ்லீப்பிங் மூட்'க்கு சென்றுவிடும். 14 நாட்களுக்குப் பின்னர் மீண்டும் செயற்படும் வகையில்தான் அதனை உருவாக்கியுள்ளோம். எனவே, அந்த நாட்களில் சந்திரயான் மீண்டும் செயற்படத் தொடங்கும் என்ற நம்பிக்கையுள்ளதாக இஸ்ரோவின் தலைவர் சோம்நாத் தெரிவித்தார்.

மேலும் நிலவின் பரப்பில் மெல்ல நகர்ந்து, மேற்பரப்பிலுள்ள மண், உலோகத்தன்மை உள்ளிட்டவற்றை ஆராய்ந்துவரும் பிரக்யான் ரோவர், சுமார் 100 மி.மீ. ஆழமுள்ள மிகப்பெரிய பள்ளத்தை முன்கூட்டியே அறிந்து அதனை வெற்றிகரமாக சமாளித்துக் கடந்துள்ளது.

இதன்மூலம், இஸ்ரோ கட்டுப்பாட்டு அறையில் இருந்தவர்களுக்கு மிகப்பெரிய நிம்மதி கிடைத்திருக்கிறது. மேலும், இதுபோன்ற எண்ணற்ற சவால்களை பிரக்யான் ரோவர் கடந்து செல்வதற்கான வழிகாட்டுதல்கள் மற்றும் கண்காணிப்புகளை தீவிரப்படுத்தவும் விஞ்ஞானிகள் தயாராகியுள்ளனர்.

பிரக்யான் ரோவரின் இயக்கம், முழுமையாக தன்னிச்சையானது அல்ல என்றும், நிலவின் மேற்பரப்பில் இருக்கும் சமநிலையற்ற தன்மையால், ஏராளமான சவால்கள் காத்திருப்பதாகவும், அவற்றை பிரக்யான் ரோவர், இஸ்ரோ விஞ்ஞானிகள் குழுவின் உதவியோடு எதிர்கொள்ளும் என்றும் இஸ்ரோ தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரோவரிலிருக்கும் கெமரா மூலம், அடுத்த ஐந்து மீற்றர் பாதை புகைப்படமாக எடுக்கப்பட்டு விஞ்ஞானிகளுக்கு அனுப்பி வைக்கப்படும். ஒவ்வொரு வினாடியும் வரும் புகைப்படங்களை ஆராய்ந்து, ரோவர் எந்தப் பாதையில் இயங்க வேண்டும் என்பது கட்டளையாக பிறப்பிக்கப்படும். முதல் தடையை ரோவர் எப்படி சமாளிக்கும் என்று விஞ்ஞானிகள் குழு சற்று பரபரப்புடனே கண்காணித்து வந்தது. ஆனால், ரோவர் மிகச் சரியாக 100 மில்லிமீற்றர் ஆழமுள்ள பள்ளத்தைக் கடந்து வந்துள்ளதென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலவிக் தென்துருவத்தை ஆய்வுசெய்வதற்காக இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ, கடந்த ஜூலை மாதம் 14ஆம் திகதி சந்திரயான்-3 என்ற விண்கலத்தை விண்ணில் ஏவியது.

இந்நிலையில், விண்கலம் சுமார் 41 நாட்கள் பயணத்துக்குப் பின்னர் சந்திரயான்-3இன் விக்ரம் லேண்டர் கடந்த 23ஆம் திகதி மாலை 6.04 மணியளவில் நிலவின் தென்துருவப் பகுதியில் வெற்றிகரமாகத் தரையிறங்கியது. இந்த மகத்தான சாதனையை இந்திய மக்கள் மட்டுமல்லாது, உலகமே வியந்து போற்றியது. அமெரிக்கா, ரஷ்யா, சீனா, அடுத்தபடியாக நிலவின் மேற்பரப்பில் விண்கலத்தை வெற்றிகரமாக தரையிறக்கிய நான்காவது நாடாக இந்திய உருவானதுடன், நிலவின் தென்துருவப் பகுதியில் விண்கலத்தை வெற்றிகரமாகத் தரையிறக்கிய முதல் நாடு என்ற பெருமையையும் பெற்றுக்கொண்டுள்ளது.

நிலவின் நிலவியல் தன்மையை ஆராய்வதற்காக சென்றுள்ள விக்ரம் லேண்டரிலிருந்து வெளிவந்த பிரக்யான் ரோவர் கடந்த 24ஆம் திகதி அதிகாலை 12.30 மணியளவில் சரிவுதளத்தின் வாயிலாக நிலவின் தரை மீது இறங்கியது. நிலவில் விக்ரம் லேண்டர் தடம் பதித்துள்ள இடத்திலிருந்து 500 மீற்றர் சுற்றளவுப் பகுதியில் பிரக்யான் ரோவர் ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது. நிலவு தொடர்பான பல்வேறு புகைப்படங்களை இஸ்ரோ தலைமையகத்துக்கு அனுப்பிவைத்துள்ளது.

**நிலவின் மிகச்சிறந்த புகைப்படங்கள் இந்தியாவிடம் உள்ளன**

சந்திரனைப் பற்றிய மிகச்சிறந்த தெளிவான புகைப்படம் இந்தியாவிடம் உள்ளது என்று இஸ்ரோவின் தலைவர் சோமநாத் தெரிவித்துள்ளார்.

நிலவில் எந்த நாடும் கால்பதிக்காத தென் துருவப் பகுதியில் சந்திரயான்-3 லேண்டரை இறக்கியது. அது வெற்றிகரமாக நிலவை ஆய்வு செய்யும் பணியைத் தொடங்கியுள்ளது.

அனைத்து கருவிகளும் சிறப்பாக செயற்பட்டு வருவதாகவும் செப்டெம்பர் 3ஆம் திகதி வரை இயக்கமுடியும் என்றும் திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய இஸ்ரோவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

உலகில் வேறெங்கும் கிடைக்காத நிலவின் மிகவும் நெருக்கமான படங்கள் கிடைத்திருப்பதாகவும், அவற்றை வெளியிடுவதில் சிறிது தாமதமாகலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

பூமியின் 14 நாட்கள் நிலவின் ஒருநாள் என்று கணக்கிடப்படுவதால் செப்டெம்பர் 3 வரை அவகாசம் இருப்பதாகவும் அனைத்து ஆய்வுகளும் சிறப்பாக நடைபெற்று வருவதாகவும் சோமநாத் சுட்டிக்காட்டினார்.

# பிரான்ஸ் பாடசாலைகளில் அபாயா அணியத் தடை



பிரான்ஸ் அரச பாடசாலைகளில் கல்வி பயிலும் முஸ்லிம் பெண்கள் அபாயா அணிவது தடைசெய்யப்படவுள்ளதாக அந்நாட்டு கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ், 19ஆம் நூற்றாண்டு சட்டங்கள் பொதுக் கல்வியிலிருந்து பாரம்பரிய கத்தோலிக்க செல்வாக்கை நீக்கியதிலிருந்து அரச பாடசாலைகளில் மத அடையாளங்களுக்கு கடுமையான தடையை அமுல்படுத்தியது. மேலும், வளர்ந்துவரும் முஸ்லிம் சிறுபான்மையினரைக் கையாள்வதற்கான வழிகாட்டுதல்களை புதுப்பிக்கவும் போராடியது.

2004ஆம் ஆண்டில், பாடசாலைகளில் ஸ்காப் அணிவதைத் தடைசெய்தது மற்றும் 2010ஆம் ஆண்டு பொது இடங்களில் முழு முகத்தை மூடுவதற்குத் தடை விதித்தது. இந்த தடை உத்தரவுகள் அங்கு வசித்துவரும் ஐந்து மில்லியன் வலிமையான இஸ்லாமிய சமூகத்தில் சிலரைக் கோபப்படுத்தியது. மதச்சார்பின்மையைப் பாதுகாப்பதென்பது பிரான்ஸில் ஒரு பேரணியாக உள்ளது.

இந்நிலையில், ''பாடசாலைகளில் இனி அபாயா அணிய முடியாது என்று முடிவு செய்துள்ளேன். நீங்கள் வகுப்பறைக்குள் செல்லும்போது, மாணவர்களைப் பார்த்து அவர்களின் மதத்தை நீங்கள் அடையாளம் காண முடியாது'' என அந்நாட்டு கல்வி அமைச்சர் கேப்ரியல் அட்டல் தெரிவித்துள்ளார்.

# ஹிந்து இராச்சியமாக நிலவை அறிவிக்க வேண்டும்!

நிலவை ஹிந்து இராச்சியமாக அறிவிக்க வேண்டும் என்று அனைத்திந்திய ஹிந்து மகாசபையின் தலைவர் சக்ரபாணி மகாராஜ் தெரிவித்துள்ளார்.



சந்திரயான்-3இல் அனுப்பப்பட்ட லேண்டர் வெற்றிகரமாக தரையிறங்கிய பகுதிக்கு 'சிவ சக்தி' என்றும், சந்திரயான்-2இல் அனுப்பப்பட்ட லேண்டர் கீழே விழுந்து நொறுங்கிய பகுதிக்கு 'திரங்கா' என்றும் பிரதமர் நரேந்திர மோடி கடந்த வாரம் பெயர் சூட்டினார்.

நிலவிலுள்ள பகுதிக்கு பிரதமர் மோடி 'சிவ சக்தி' என்று ஹிந்து கடவுளின் பெயரை சூட்டியதாக காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் கண்டத்தை பதிவு செய்திருந்தன.

இதற்கிடையே, ஹிந்து மகாசபையின் தலைவர் எக்ஸ் (ட்விட்டர்) வாயிலாக வெளியிட்ட காணொளியில் மேலும் ஒரு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளார்.

அந்த காணொலியில், "நிலவை ஹிந்து இராச்சியமாக பாராளுமன்றம் அறிவிக்க வேண்டும். சந்திரயான்-3 தரையிறங்கிய 'சிவ சக்தி' புள்ளியை தலைநகராக உருவாக்கவேண்டும். அப்போதுதான், ஜிகாதி மனநிலையுடன் உள்ள பயங்கரவாதிகள் அங்கு செல்ல முடியாது" என்று தெரிவித்துள்ளார்.

சக்ரபாணி மகாராஜின் இந்தக் கருத்துக்கு பல்வேறு தரப்பினர் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

# நிலா பயணத்தை ஒத்திவைத்த ஜப்பான்

நிலவுக்கு விண்கலத்தை அனுப்பும் 'மூன் ஸ்னைப்பர்' பயணத்தை மூன்றாவது முறையாகவும் ஜப்பான் ஒத்திவைத்துள்ளது.

மோசமான வானிலை காரணமாக ஜப்பானின் விண்வெளி நிறுவனம் தனது 'மூன் ஸ்னைப்பர்' சந்திர பயணத்தை மூன்றாவது முறையாக ஒத்திவைப்பதாக அறிவித்துள்ளது.

இந்நிலையில், நேற்றுக் காலை விண்ணில் ஏவுவதற்குத் தயாராகவிருந்த எச்2-ஏ ரொக்கெட், லிப்ட்ஓவ் நேரத்திற்கு 24 நிமிடங்களுக்கு முன் ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

மீண்டும் மூன் ஸ்னைப்பர் பயணத்துக்கான புதிய திகதியை ஜப்பான் அரசு இன்னும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவுக்கு பாலம் கட்டுவதெனில் சர்வஜன வாக்கெடுப்பு வேண்டும்!

## மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவிப்பு

இலங்கையையும் இந்தியாவையும் இணைக்கும் பாலம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமானால் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி மக்களின் விருப்பத்தைப் பெறவேண்டும் - என பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

ராகம பிரதேசத்தில் இடம்பெற்ற ஆராதனை நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய ஆண்டகை, வரலாற்றுக் காலம் தொடக்கம் நாட்டின் ஆட்சியாளர்கள் இந்த நாட்டை அந்நியர்களுக்கு காட்டிக்கொடுத்து வருகின்றனர் என்பதை வலியுறுத்தினர்.

மேலும் கருத்து தெரிவித்த ஆண்டகை,

"நாங்கள் எங்கள் நாட்டின் துண்டுகளை வெவ்வேறு நாடுகளுக்கு விற்பனைசெய்கிறோம். ஒரு சக்திக்கு அடிபணிந்து பல்வேறு முட்டாள்தனமான முடிவுகளை எடுத்து இந்த நாட்டை அழிவை நோக்கி இட்டுச்செல்லும் வேலையில் ஈடுபட்டுள்ளனர். அந்த ஆட்கள் இந்தியாவுக்கு பாலம் கட்டுகிறார்கள். இப்போது இந்தியாவிலிருந்து நமக்கு என்ன பிரச்சினை? ஒருமுறை பருப்பு கொண்டு வந்தது நினைவிருக்கிறதா?.

இலங்கைக்கு இராணுவம் அனுப்பப்பட்டது.



அவர்களின் கருத்தின் அடிப்படையில் சில விடயங்களைச் செயல்படுத்தவேண்டிய கட்டாயத்தில் இருந்தோம் என்பது உங்களுக்கு நினைவிருக்கிறது.

அவர்களை எங்கள் தோளில் ஏற்றவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இன்னொரு பாலம் கட்டினால் நன்றாக இருக்கும். இந்த முட்டாள்தனமான கதைகளை யார் சொல்வது?

நமது நாடு எப்போதும் சுதந்திர நாடாகவே இருந்துவருகிறது. நாங்கள் எந்த நாட்டுக்கும் அடிமையாக இருந்ததில்லை. வேறொரு நாட்டிலிருந்து பிரிந்து செல்லவில்லை. அன்றுமுதல் இலங்கை தனிநாடாக இருந்தது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பொருளாதார ஒப்பந்தங்களை இந்நாட்டு மன்னர்கள் கையாண்டார்கள், ஆனால், நாம் யாரையும் அடிமைப்படுத்தவில்லை.

நமது தலைவர்களின் துரோகத்தாலேயே அது நடந்தது. நாளையும் இதே நிலை ஏற்படலாம். இந்த பாலம் கட்டும் யோசனைக்கு பொதுமக்கள் கருத்துக்கணிப்பு நடத்த வேண்டும். பொதுமக்கள் கருத்து இல்லாமல் இவற்றைச் செய்வது தவறு.

இன்று நம் நாட்டை நினைத்து வருந்துகிறோம். விடுதலைக்குப் பின், நாம் இப்போது சுதந்திரத்தை இழக்க வேண்டும்.

அனைத்து நாடுகளுக்கும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வழங்குவோம். துண்டு துண்டாக உடைப்போம். அப்போது நமக்கு எதுவும் மிச்சம் இருக்காது. இது ஒருவகையான நோய்" என்றார்.

# சவால்களை சாமான்யமாக எதிர்கொண்டவர் மயோன்

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் அனுதாபம்





முன்னாள் பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபாவின் மறைவு நேரிய அரசியல் சிந்தனைகளுக்கு கிடைத்த மரண அடியென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அன்னாரின் இழப்பு குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

"எனது நீண்டகால நண்பரான மயோன் முஸ்தபாவின் மறைவு மிகவும் கவலை தருகிறது. கணினிக் கல்வியின் பிதா எனப் பெயர்பெற்றவர் முன்னாள் பிரதிக் கல்வியமைச்சர் மயோன் முஸ்தபா. சர்வதேச அளவில் உயர் பதவிகளில் நமது உறவுகள் இருப்பதற்கு இவரது கணினிக் கற்கைகள் கலங்கரைவிளக்காகச் செயற்படுகின்றன.

செல்வத்தின் உச்சியிலும், செல்வாக்குக்கு மத்தியிலும் சாதாரணமாக வாழ்ந்த சிறந்தவரும் இவர்தான். அரசியலில் எதிர்கொண்ட சவால்களை சமயோசிதமாக முறியடித்த அவரது பக்குவங்கள் பலருக்கு படிப்பினையாகின்றன. மர்ஹூம் மயோன் முஸ்தபாவின் வாழ்வும் இப்படி பல படிப்பினைகள் அடங்கியவை. அதிகாரங்களை இலக்குவைத்து அவர் செயற்படவில்லை. அடக்குமுறையை ஒழிப்பதை குறிக்கோளாகக்கொண்டதுதான் அவரது அரசியலாக இருந்தது.

அவரின் இழப்பால் துயருறும் சகலருக்கும் இறைவனின் தீர்ப்பை ஏற்கும் பக்குவத்தை அல்லாஹ் வழங்குவானாக..!" என்று குறிப்பிட்டுள்ளார்.

# வில்பத்து, தப்போவ சரணாலயங்களில் வேட்டைக்குச் சென்ற 12 பேர் கைது

## 8 பேர் தப்பியோட்டம்





வில்பத்து மற்றும் தப்போவ சரணாலயங்களில் வேட்டைக்குச் சென்ற 4 குழுக்களைச் சேர்ந்த 12 பேர், கருவலகஸ்வெவ மற்றும் வண்ணாத்திவில்லு வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை (27) அதிகாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர். எனவும் 8 பேர் தப்பியோடியுள்ளனர் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

வில்பத்து மற்றும் தப்போவ சரணாலயங்களில் தொடர்ந்தும் சட்டவிரோதமாக விலங்குகள் வேட்டையாடப்பட்டு வருவதாக தெரிவித்த நிலையில், இரண்டு நாட்களாக தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது நேற்றுமுன்தினம் அதிகாலை இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு துப்பாக்கி ரவைகள் - 16, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ரவைகள் - 7, வேட்டைக்கு பயன்படுத்தப்படும் வெடிபொருட்கள், 5 தொலைபேசிகள், 7 கத்திகள் மற்றும் 7 மோட்டார்சைக்கிள்கள், வேட்டைக்கு பயன்படுத்தப்பட்ட ஏனைய பொருட்கள் இவ்வாறு கைப்பற்றப்பட்டதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட 12 பேரையும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் நேற்றுமுன்தினம் மாலை பிணையில் விடுவித்துள்ளதுடன், புத்தளம் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் இதன்போது தெரிவித்தனர்.

# மாத்தறையில் பொலிஸ் சார்ஜன்ட்டின் சடலம் மீட்பு

## தற்கொலையா என விசாரணை

மாத்தறை மாவட்ட நீதிபதியின் உத்தியோக பூர்வ இல்லத்தில் கடமையாற்றிய பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் ரி-56 ரக துப்பாக்கியால் மார்பில் சுடப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதாக மாத்தறை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கெனதுறை தல்பாவில மெதபொல தோட்டத்தைச் சேர்ந்த 54 வயதுடைய பந்துல புஷ்பகுமார என்பவரே உயிரிழந்துள்ளார். இவரது மார்பில் இரண்டு முறை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

சடலம் கண்டெடுக்கப்பட்ட இடத்தில் சந்தேகத்துக்கிடமான துப்பாக்கி காணப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் கொலையா, தற்கொலையா என்பது தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் நடக்கின்றன.

# திருமண நிகழ்வில் நடனமாடிய யுவதி திடீரென உயிரிழப்பு

## ஹொரணையில் சம்பவம்



திருமண நிகழ்வொன்றில் நடனமாடிக்கொண்டிருந்த 25 வயதான இளம் யுவதியொருவர் திடீரென உயிரிழந்துள்ளார்.

ஹொரண பதுவிட்ட பிரதேசம், மெகொட உட கெவத்த பிரதேசத்திலுள்ள தனியார் நிறுவனமொன்றில் விற்பனை அதிகாரியாக பணிபுரிந்து வந்த மஞ்சரி ஆதித்ய பெர்னாண்டோ என்ற 25 வயதுடைய யுவதியே உயிரிழந்துள்ளார்.

ஹொரண கோனாபொலவிலுள்ள விழா மண்டபம் ஒன்றில் இந்தச் சம்பவம் நடந்தது.

உயிரிழந்த யுவதி பணியாற்றிய நிறுவனத்தின் சக பணியாளர் ஒருவரின் திருமண வைபவம் அங்கு நடந்தது.

உயிரிழந்த யுவதியும், நண்பர்களும் அங்கு நடனமாடியுள்ளனர்.

உயிரிழந்த யுவதியும், மேலும் இரண்டு யுவதிகளும் நடனமாடிக்கொண்டிருந்தபோது, யுவதி திடீரென சுகயீனமடைந்தார். உடனடியாக அவர் காரில் அருகிலுள்ள தனியார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

அவரை ஹொரண பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர். .

ஹொரணை பொது வைத்தியசாலைக்கு யுவதியை அழைத்துச் சென்றதையடுத்து, வைத்தியர்கள் பரிசோதித்தபோது அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை ஹொரணை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பொரலுகந்தயில் விகாரை அமைக்கத் தடை எதிராக பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டம்

திருகோணமலை மேலதிக, மீனோடைக்கட்டு செய்தியாளர்கள்

திருகோணமலை, இலுப்பைக்குளம், பொரலுகந்தயில் ரஜமகா விகாரை அமைப்பதற்கு தடை விதித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பௌத்த பிக்குகள் மற்றும் சில பொதுமக்கள் நேற்று(28) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலை மாவட்ட செயலகத்துக்கு முன்னால் ஏ6 பிரதான வீதியை வழிமறித்து இடம்பெற்ற குறித்த ஆர்ப்பாட்டத்தின் போது கிழக்கு ஆளுநருக்கு எதிரான கோஷங்களை எழுப்பியதுடன் பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.





திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நேற்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெற்றுவந்த நிலையில், இது தொடர்பாகவும் பேசப்பட்டது.

குறித்த பகுதியில் விகாரை அமைப்பதற்கு எதிராக தமிழ் மக்களினால் முன்வைத்த கோரிக்கையை பரிசீலித்த கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் ஜனாதிபதியினால் அப்பகுதியில் அமைக்கப்பட்ட விகாரையின் கட்டுமானங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இந்நிலையிலேயே இதற்கு எதிரான ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

காலாகாலமாக தமிழ் மக்கள் வாழுகின்ற பகுதிக்குள் விகாரை அமைத்தால் அது இன முறுகலை ஏற்படுத்தும் என்ற வகையிலும் இன நல்லிணக்கத்தை பாதிக்கும் என்ற வகையிலும் தமிழ் மக்களினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை திருகோணமலை மாவட்ட செயலகத்துக்கு பொது மக்கள் உள்நுழைய முடியாத வகையிலும் அரச அதிகாரிகள் மற்றும் மக்கள் வெளியேற முடியாத வகையிலும் ஆர்ப்பாட்டக்காரர்களினால் நுழைவாயில் மூடப்பட்டிருந்தது. இதனால் அப்பகுதியில் பதற்றம் நிலவியது.

இந்நிலையில், மாவட்ட அரசாங்க அதிபர் உள்ளிட்ட அரச அதிகாரிகளுடனான சந்திப்புக்கு ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு பேச்சுவார்த்தை இடம்பெற்றது. திருகோணமலை பிரதேச செயலகத்தினால் பெரியகுளம் பொரலுகந்தயில் ரஜ மஹா விகாரையின் நிர்மாணப் பணிகளுக்கான தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில், குறித்த தடை உத்தரவை நீக்குமாறு திருகோணமலை மாவட்ட செயலகத்தினால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டு ஆர்ப்பாட்டக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்டது .

இந்நிலையில், குறித்த நிர்மாணப் பணிக்கான தடையை நீக்கிய மாவட்ட செயலகத்துக்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் நன்றி தெரிவித்தனர். திருகோணமலை மாவட்டத்தின் இன நல்லிணக்கத்துக்கு ஏதுவான செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கையும் விடுத்தனர்.

கிழக்கு செய்திகள்
easthamilan@gmail.com

# அறபாநகர் பாலத்தை புனரமைக்க கோரி பிரதேச மக்கள் போராட்டம்

மூதூர் நிருபர்

மூதூர் -அறபாநகர் பாலத்தை புனரமைக்குமாறு கோரி நேற்று திங்கட்கிழமை (28) காலை பொதுமக்களால் கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

அறபாநகர் பாலத்துக்கருகாமையில் இடம்பெற்ற இப்போராட்டத்தில் கலந்துகொண்டோர் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட சுலோகஅட்டைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர்.



அறபா நகர் பாலம் கடந்த 2009 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இப்பாலமானது தற்போது வெடிப்புகள் ஏற்பட்டு உடைந்து விழும் நிலையில் உள்ளது. இந்நிலையிலேயே குறித்த பாலத்தைப் புனரமைக்குமாறு கோரி இப்பகுதி வாழ் மக்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கட்டைபறிச்சான், அறபாநகர், அம்மன்நகர், தங்கநகர் உள்ளிட்ட பல கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும் போக்குவரத்துக்காக தினந்தோறும் அறபாநகர் பாலத்தைப் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சுமார் 20 மீற்றர் நீளமுள்ள இப்பாலமானது சேதமடையுமாக இருந்தால் பொதுமக்கள் சுமார் 05 கிலோமீற்றர் தூரம் சுற்றிப் பயணிக்க வேண்டிய நிலையே ஏற்படும்.

இப் பாலத்தினூடாகத் தினந்தோறும் பயணிக்கும் மக்கள் மிகவும் அச்சத்துடனேயே செல்கின்றனர். இப்பாலம் எப்போது உடையுமென்று தெரியாது. குறிஞ்சாக்கேணி விபத்துப் போன்று அறபாநகர் பாலத்தில் ஏற்படுவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இப்பாலத்தைப் புனரமைக்க வேண்டுமென போராட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.

# காணாமலாக்கப்பட்ட உறவுகளின் நாளைய போராட்டத்துக்கு ஆதரவு

## கோவிந்தன் கருணாகரம் எம்.பி.அறிவிப்பு

கனகராசா சரவணன்

கிழக்கில் வலிந்து காணமலாக்கப்பட்டோரின் உறவுகளினால் மட்டக்களப்பில் நாளை(30) நடத்தப்படவுள்ள ஆர்ப்பாட்டப்பேரணிக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் முழு ஆதரவு வழங்குவர் என்று பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு வாவிக்கரையிலுள்ள பாராளுமன்ற உறுப்பினரின் காரியாலயத்தில் நேற்று(28)இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இம்மாநாட்டில் புளொட் அமைப்பின் இணைப்பாளர் கேசவன், கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் இரா. துரைரெட்ணம், ரெலோ அமைப்பின் பிரசன்னா இந்திரகுமார், ஜனநாயகப் போராளிகள் கட்சி இணைப்பாளர் நகுலேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் நாளை (30)உலகெங்கும் நினைவு கூரப்படவுள்ளது. இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் குடும்ப உறுப்பினர்களுடன் -வெள்ளைக் கொடியுடன் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்தனர். இவர்களுக்கு என்ன நடந்தது என இதுவரை அரசாங்கங்கள் கூறவில்லை.



கடந்த 14 வருடங்களாக மாறிமாறி இந்த நாட்டை ஆண்டுவந்த ஆட்சியாளர்கள் இதற்கான பதிலை இதுவரை தெரிவிக்கவில்லை. அந்த வகையில் வடக்கில் மன்னாரிலும் கிழக்கிலே மட்டக்களப்பிலும் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளினால் நீதிகோரி பாரிய ஆர்ப்பாட்டப் பேரணியொன்று நாளை நடத்தப்படவுள்ளது.

எனவே, இந்தப் போராட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழு ஆதரவையும் வழங்கும். இந்நிலையில், எமது உறவுகளுக்கான நீதியை பெற்றிட தேசியத்தின்பால் ஈர்ந்துள்ள அனைவரும் இதற்கு ஆதரவு வழங்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

# நாதனோடையில் மணல் அகழ்வு; பிரதேச மக்கள் எதிர்ப்புப் போராட்டம்

திருகோணமலை-வெருகல் நாதனோடையில் முன்னெடுக்கப்பட்டுவரும் மணல் அகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பகுதி மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



குறித்த பகுதியில் மணல் அகழ்வதற்காக வெருகல் பிரதேச செயலகம் அனுமதி வழங்கியுள்ளது. இந்நிலையில், வெருகல் பிரதேசத்துக்குட்பட்ட 10 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் மணல் ஏற்றுவதற்காகச் செல்லும் வழியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.



மகாவலி கங்கையை அண்மித்த நாதனோடை கடந்த 2008 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தின் போது உடைப்பெடுத்தது.

இதனால் இப்பகுதி வாழ் மக்கள் இடம்பெயர்ந்து வேறு கிராமங்களில் வசித்து வந்தனர். அக்காலப் பகுதியில் திருகோணமலை-மட்டக்களப்பு பிரதான வீதி வெள்ளத்தில் மூழ்கியது.

இந்நிலையில், குறித்த பகுதியில் தொடர்ச்சியாக மணல் அகழ்வதனால் வெள்ளப் பாதிப்புகள் ஏற்படலாம் என்பதைச் சுட்டிக்காட்டியே மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# விபத்தில் சிக்கிய இளைஞன் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

மண்டூர் செய்தியாளர்

வாழைச்சேனை பிரதான வீதியில் அண்மையில் இடம்பெற்ற விபத்தில் சிக்கி படுகாயமடைந்த இளைஞன் சிகிச்சை பலனின்றி நேற்று (28) உயிரிழந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டமாவடி, பெரிய ஜூம்ஆப் பள்ளி வீதியைச் சேர்ந்த 25 வயது இளைஞனே மேற்படி சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

ஓட்டமாவடி பிரதேசத்திலிருந்து கடந்த 23ஆம் திகதி புணானை பிரதேசத்திலுள்ள தந்தையின் வீட்டுக்கு நண்பருடன் சென்று மீண்டும் மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருக்கும் போது தனியார் பஸ்ஸுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளாகியது. இதன்போது சம்பவ இடத்தில் ஒருவர் உயிரிழந்த நிலையில், குறித்த இளைஞன் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான் பீற்றர் போலின் உத்தரவுக்கமைவாக சம்பவ இடத்துக்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தும்படி சட்ட வைத்திய அதிகாரியிடம் பரிந்துரைத்தார். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# ஆங்கில பேராசிரியராக ஏ.எம்.எம்.நவாஸ் நியமனம்

நூருல் ஹுதா உமர்



பேராசிரியர் ஏ.எம்.எம். நவாஸ் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முதல் ஆங்கிலப் பேராசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

1969 ஜூலை மாதம் பிறந்த அப்துல் மஜீட் முகம்மது நவாஸ், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பேரவையால் 29.09.2021 முதல் ஆங்கிலப் பேராசிரியராக (ELT) நியமிக்கப்பட்டுள்ளார்.

பேராசிரியர் நவாஸ் 1990 ஆம் ஆண்டு கல்வியமைச்சினால் நடத்தப்பட்ட போட்டித் தேர்வில் சிறப்புத் தேர்ச்சி பெற்று ஆங்கில ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இந்நிலையில், இவர் 1995 டிசம்பரில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விவசாய விஞ்ஞான இளமாணிப் பட்டத்தைப் பெற்றார். அதனைத் தொடர்ந்து அவர் 1996 இல் விவசாய பீடத்தில் தற்காலிக உதவி விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார்.

மேலும் 1997 ஏப்ரல் மாதம் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் நிரந்தர ஆங்கில பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்ட இவர், 1997 மே மாதம் அதே பல்கலைக்கழகத்தின் ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவின் தலைவராகவும் நியமிக்கப்பட்டார். மேலும் 2005 இல் உறுதிப்படுத்தப்பட்ட விரிவுரையாளராகப் பதவியுயர்வு பெற்ற இவர் சிரேஷ்ட விரிவுரையாளர் - II மற்றும் I ஆகிய தரங்களுக்கு முறையே 2012 மற்றும் 2016 இல் பதவி உயர்த்தப்பட்டார். தற்போது அவர் 26 ஆண்டுகளுக்கும் மேலான பல்கலைக்கழக கற்பித்தல் அனுபவத்தைப் பெற்றுள்ளார்.

# அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவர்களுக்கு பாராட்டு

அட்டாளைச்சேனை செய்தியாளர்

இம்முறை இடம்பெற்ற அகில இலங்கை தமிழ்மொழித் தின மாகாண மட்டப் போட்டிகளில் அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவர்கள் திறமைகளை வெளிக்காட்டி பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.



இம்மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அதிபர் ஏ.எச்.பௌஸ் தலைமையில் பாடசாலை வளாகத்தில் நேற்று(28) இடம்பெற்றது. இதன்போது பிரதி அதிபர்களான எம்.இக்பால், எஸ்.எம்.எம்.ஜாபீர், உதவி அதிபர் ஏ.எல்.சம்சுல் பழீல, ஆசிரியைகளான ஏ.நஸ்ரீனா, எம்.ஏ.ஹக்கீமா உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

இவ்வாண்டுக்கான தமிழ் மொழித்தின மாகாண மட்டப்போட்டி அட்டாளைச்சேனை அல்-முனீறா பெண்கள் பாடசாலையில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது சிறுகதை ஆக்கம் எழுத்தாக்கப் போட்டியில் கலந்துகொண்ட ஏ.எல்.பாத்திமா நுஸ்றா மாகாண மட்டத்தில் முதலாமிடம் பெற்று தேசிய மட்டப் போட்டியில் கலந்துகொள்வதற்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, மாகாண மட்டத்தில் நடைபெற்ற எழுத்தாக்க கவிதைப் போட்டியில் பங்குகொண்ட ஐ.பாத்திமா றீஸா மூன்றாமிடத்தைப் பெற்றுக்கொண்டார்.

# மாணவர்களின் சுகாதார மேம்பாடு: கல்முனையில் கலந்துரையாடல்

பொத்துவில் நிருபர்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனையின் கீழ் கல்முனை பிராந்தியத்தில் உள்ள பாலர் பாடசாலை மட்டங்களில் சுகாதார மேம்பாட்டை விஸ்தரிப்பது தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் சனிக்கிழமை (26) இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் சுகாதார, கல்வி உத்தியோகத்தர் எம்.ஜே.எம்.பைரூஸினால் ஒருங்கிணைக்கப்பட்ட இந்நிகழ்வில் வளவாளர்களாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தாய்-சேய் நலப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி ஏ.எச்.ரிஸ்பின், பொதுச் சுகாதாரப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.ஏ.எம்.ஹில்மி, பிராந்திய வாய்ச் சுகாதார நிபுணர் எம்.எச்.கே.சரூக் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பாலர் பாடசாலைகளில் போஷணை மட்டத்தை அதிகரிப்பது, வாய்ச் சுகாதாரத்தை மேம்படுத்தி சிறுவர்களின் வாய்ச் சுகாதாரத்தைப் பாதுகாப்பது, சிறார்களின் பொதுச் சுகாதாரம் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.





# காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கோரி வடக்கு – கிழக்கில் போராட்டம்

## அனைத்து தரப்பினரையும் ஆதரவு வழங்குமாறு அமலநாயகி கோரிக்கை

**வாழைச்சேனை செய்தியாளர்**

காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கோரி வடக்கு, கிழக்கில் நாளை போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம். இப்போராட்டத்துக்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டும் என வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவி அமல்ராஜ் அமலநாயகி தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக மட்டு. ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,



நாளை 30 ஆம் திகதி சர்வதேச வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தினமாகும். இத்தினத்தை முன்னிட்டு கடந்த காலங்களிலும் வடக்கு, கிழக்கில் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தினால் வடக்கிலும் கிழக்கிலும் பாரிய போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதேபோன்று இவ்வருடமும் ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தத் தீர்மானித்துள்ளோம்.

இதுவரை காலமும் அரசாங்கத்தினால் எங்களுக்கு எந்தவொரு பதிலும் கிடைக்காத பட்சத்தில் சர்வதேச பொறிமுறையையே நாடி நிற்கின்றோம். எங்களுக்கு சர்வதேச விசாரணையொன்றினூடாகவே நீதி கிடைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியே நாங்கள் இந்தப் போராட்டத்தை நடத்தவுள்ளோம். அதேபோன்று இனிவரும் காலங்களில் இவ்வாறான கடத்தல்கள், காணாமலாக்கப்படுதல்கள் இல்லாமல் இருப்பதற்கான உறுதிப்பாட்டை சர்வதேசம் மேற்கொள்ள வேண்டும்.

எமது போராட்டம் வடக்கில் மன்னார் மாவட்டத்திலும் கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் இடம்பெறவுள்ளன. மன்னாரில் இடம்பெறும் போராட்டத்தில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் அங்கு சென்று கலந்து கொள்ளலாம். அதேபோன்று கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்லடிப் பாலத்தில் இருந்து எமது பேரணி ஆரம்பமாகி காந்தி பூங்கா வரை சென்று அங்கு ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டு பேரணி அறிக்கை வாசிக்கப்பட்டு நிறைவுபெறும்.

எமக்கு நடந்தது போன்று எமது சந்ததியினருக்கு இவ்வாறான நிலைமை ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகவே இந்தப் பேரணிகளை நாங்கள் ஒழுங்கு செய்திருக்கின்றோம். அதேபோன்று அரசாங்கம் எங்கள் பிரச்சினைக்கான தீர்வை வழங்காத பட்சத்திலேயே நாங்கள் சர்வதேசப் பொறிமுறையை நாடி போராட்டங்களை முன்னெடுக்கின்றோம்.

இதற்காக நடத்தப்படவுள்ள இந்தப் பேரணியில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள், மதத் தலைவர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், பல்கலைக் கழக மாணவர்கள், ஆசிரியர்கள், இளைஞர் கழகங்கள், தேசியம் சார்ந்த அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள், வர்த்தகர்கள், சமூக சேவை நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள், பண்ணையாளர்கள், மீனவர்கள், விவசாயிகள் உட்பட அனைத்து நலன்விரும்பிகளும் பங்குபற்றி எமக்கு ஆதரவு வழங்க வேண்டும்.

எமது போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு பல வருடங்கள் கடந்த நிலையிலும் எங்களது உறவுகளைத் தேடும் பயணத்தில் எம்மோடு பயணித்த 187க்கும் மேற்பட்ட தாய்மாரை நாங்கள் இழந்து நிற்கின்றோம். அதேபோன்று காலங்கள் செல்லச் செல்ல சாட்சியங்களும் அழிக்கப்படுகின்றன. எனவே, இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு வேண்டும் என்பதற்காக பாதிக்கப்பட்ட சமூகமாக பல்வேறு சதித்திட்டங்கள், அழுத்தங்கள் என்பவற்றுக்கு மத்தியிலும் முன்னெடுத்து வருகின்றோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூட கிழக்கில் தமிழ் மக்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்றவாறாக கருத்துக்களை வெளியிட்டுள்ளார். அத்துடன், காணாமலாக்கப்பட்டோர் அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டு 05 வருடங்கள் கடந்த நிலையிலும் கூட இன்னும் ஐந்து பேருக்காவது நியாயம் வழங்கப்படவில்லை. எமது உறவுகளின் உயிர்களை வெறும் இரண்டு இலட்சம் ரூபாவுக்கு நிர்ணயம் செய்ததே தவிர, அந்த அலுவலகத்தினால் நியாயமான விசாரணைகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. அந்த அலுவலகத்தை நாங்கள் முற்றாக நிராகரிப்பதுடன் ஜனாதிபதியின் இவ்வாறான கருத்து பொய்யானது என்பதையும் எமது மக்கள் இந்த மண்ணிலே பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து, இன்னும் தம் உறவுகளைத் தேடிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதையும் இப்போராட்டம் அவருக்கு வெளிப்படுத்தும் என்றார்.

# சாய்ந்தமருது இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருந்த கட்டடம்

## பொதுவான அலுவலகத் தேவைக்காக பயன்படுத்துமாறு மக்கள் வேண்டுகோள்

**இஸ்மாயில்புரம் செய்தியாளர்**

சாய்ந்தமருது இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருந்த கட்டடத்தை பிரதேசத்தின் பொதுவான அலுவலகத் தேவைக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

சாய்ந்தமருது கடற்கரை வீதி சிறுவர் சதுக்கத்துக்கு முன்னால் இயங்கி வந்த தற்காலிக இராணுவ முகாம் தற்பொழுது அங்கிருந்து முழுமையாக அகற்றப்பட்டுள்ளதுடன் இதற்காகப் பயன்படுத்தப்பட்ட அலுவலக கட்டடம் மூடிய நிலையில் காணப்படுகிறது.

உரிய கட்டடமும் இடப்பரப்பும் துரித நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப் படாமல் கவனிப்பாரற்ற நிலையில் இருக்குமாயின் அது சமூக விரோத செயல்களுக்கு உட்படலாம் எனவும் இதனால் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படலாம் எனவும் பொதுமக்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.

சாய்ந்தமருதில் பொதுத் தேவைகளுக்கான இடவசதிகள் இல்லாதிருக்கும் நிலைமையைக் கவனத்திற் கொண்டு உரிய கட்டடத்தை பாழடைய விடாது உடனடியாக பொருத்தமான அரச அலுவலகமொன்றாகவோ அல்லது பொதுத் தேவைக்கான நிலையமாகவோ பயன்படுத்தும் வகையில் சாய்ந்தமருது பிரதேச செயலக நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் மற்றும் பொதுநல அமைப்புகள் கோரிக்கை விடுக்கின்றன.

கடந்த காலங்களில் போதைப் பொருள் கடத்தல் போன்ற சமூக விரோத செயல்கள் இடம்பெற்றமை காரணமாகவே பலரது வேண்டுகோளுக்குமிணங்க இங்கு இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை கோட்டக்கல்வி அதிகாரி யூ.எல்.றியால் கடமை பொறுப்பேற்பு

**மாளிகைக்காடு நிருபர்**

கல்முனை கோட்டக்கல்வி அதிகாரியாக நியமிக்கப்பட்ட யூ.எல். றியால் நேற்று (28) கல்முனை கோட்டக்கல்வி பணிமனையில் தமது கடமைகளைப் பெறுப்பேற்றுக் கொண்டார்.



கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம், வலயக் கல்வி அலுவலக கணக்காளர் வை. ஹபிபுல்லாஹ், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் முன்னிலையில் இவர் கடமைகளைப் பெறுப்பேற்றுக் கொண்டார்.

கல்முனை மற்றும் சம்மாந்துறை கல்வி வலயங்களின் தமிழ் பாட உதவிக் கல்விப் பணிப்பாளராக கடந்த பல வருடங்களாக கடமையாற்றிவரும் இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரியான றியாலுக்கு அப்பதவிக்கு மேலதிகமாகவே கோட்டக் கல்வி அதிகாரி பதவி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொக்கட்டிச்சோலையில் திருவிழா

**மட்டக்களப்பு நிருபர்**



மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் 9 ஆம் நாள் திருவிழா ஞாயிற்றுக்கிழமை (27) இரவு இடம்பெற்றது. இத்திருவிழா பெத்தான்குடி மக்களினால் நடத்தப்பட்டது.

ஆலய பிரதம குரு மு.கு. சச்சிதானந்தக் குழுக்கள் தலைமையில் நடைபெற்ற இத்திருவிழாவில் மூல மூர்த்தியாகிய தான்தோன்றீஸ்வரருக்கும் கொடித் தம்பத்துக்கும் பூஜைகள் நடைபெற்று பின்னர் வசந்த மண்டப பூஜைகள் இடம்பெற்று சுவாமி உள்வீதி வலம் வந்ததைத் தொடர்ந்து தான்தோன்றீஸ்வரர் உமாதேவியர் சமேதராய் விசேடமாக அமைக்கப்பட்ட சப்புறத்திலும் பிள்ளையார் மூசுக வாகனத்திலும் முருகன் வள்ளி தெய்வானை சமேதராய் மயில் வாகனத்திலும் விஷ்னுபகவான் குதிரை வாகனத்திலும் சண்டேசுவரர் எருது வாகனத்திலும் மேள தாள வாத்தியங்கள் முழங்க சுவாமிகள் வெளி வீதி வலம் வந்து திருவிழா நடைபெற்றது.

ஆலய தலைவர் இ.மேகராசா தலைமையில் நடைபெற்ற இத்திருவிழாவில் பெத்தான்குடி மக்களின் தலைவர் வா.தம்பித்துரைச்சாமி, பெத்தான்குடி மக்கள், ஆலய நிருவாகிகள், உள்ளிட்ட நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.



ஆலயத்தின் கொடியேற்றம் கடந்த 19 ஆம் திகதி அன்று அதிகாலை 4 மணியளவில் இடம்பெற்றிருந்தது, தேரோட்டம் எதிர்வரும் 03.09.2023 அன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நடைபெறவுள்ளதுடன் அன்றைய தினம் இரவு 7 மணியளவில் வேட்டைத்திருவிழா இடம்பெற்று, மறுநாள் 04 ஆம் திகதி அன்று அதிகாலை தீர்த்தோற்சவம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# நோயாளர் பதிவேட்டை சிறப்பாக பேணிய பாலமுனை பனங்காடு வைத்தியசாலைகளுக்கு சான்றிதழ்

**பொத்துவில், மீரா நகர் செய்தியாளர்கள்**

உலக வங்கியின் அனுசரணையில் ஆரம்ப பராமரிப்பு சுகாதார நிறுவனங்களை வலுப்படுத்துவதற்கான பீ.எஸ்.எஸ்.பீ. செயற்றிட்டத்தின் மீளாய்வுக் கூட்டம் சனிக்கிழமை (26) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஐ.எல்.எம். றிபாஸ் தலைமையில் நடைபெற்றது.





திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.சீ.எம். மாஹிர் ஏற்பாடு செய்த இம்மீளாய்வுக் கூட்டத்தில் கல்முனை பிராந்தியத்தில் உள்ள பிரதேச வைத்திய அதிகாரிகளும் ஆரம்பப் பராமரிப்பு சுகாதாரப் பிரிவுகளின் பொறுப்பு வைத்திய அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இச்செயற்றிட்டம் தொடர்பான மீளாய்வுக் கூட்டத்தில் கட்டுமானங்கள் நடைபெறுகின்ற வைத்தியசாலைகளின் கட்டுமானங்களைத் துரிதப்படுத்துவதற்கும் அதிலுள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்கும் விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகப் பணிப்பாளர் தெரிவித்திருந்தார்.

இதில் விசேட அம்சமாக பீ.எஸ்.எஸ்.பீ. செயற்றிட்டத்தின் மூலம் நோயாளர் பதிவேட்டை சிறப்பாகப் பேணியமைக்காக பாலமுனை பிரதேச வைத்தியசாலை மற்றும் பனங்காடு பிரதேச வைத்தியசாலைகளின் பொறுப்பு வைத்திய அதிகாரிகள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## போடியார் புலம்பல்!



**பாடசாலைக்குச் செல்லாத மாணவர்களின் பெற்றோர்களுக்கு சிறைத்தண்டனை வழங்க சவூதிஅரேவியாவில் சட்டம் நிறைவேறியிருக்காம். சோக்கான சட்டம்.. அந்த சவூதி சட்டத்தப்போல இலங்கையிலயும் பாடசாலைக்கு அனுப்பாத பெற்றோர்கள சிறைவைக்கிற சட்டம் ஒன்ற கொண்டுவந்தால் ஊருக்கு ஒரு சிறைச்சாலை கட்டோனும் எலுவா....?**

**புள்ளங்கல பள்ளிக்கூடத்துக்கு அனுப்பாமல் விடுறதாலதான் நம்மட கனத்த புள்ளயல் ஒழுக்கம் கெட்டு போகுதுகல்...!**

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# பூக்களோடு சில நிமிடம் கவிதை நூல் வெளியீடு

**கல்குடா நிருபர்**

கவிஞர் ஆ.லெ.மு.இர்ஷாத் எழுதிய 'பூக்களோடு சில நிமிடம்' கவிதை நூல் வெளியீட்டு விழா வாழைச்சேனை அந் நூர் தேசிய பாடசாலை பிரதான மண்டபத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது.

அஸ்பெக் அக்கடமியின் பணிப்பாளர் ஏ.எல்.எம்.இர்பான் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் பேராசிரியர் எஸ்.யோகராசா, ஓய்வு நிலை கோட்டக் கல்வி அதிகாரி ஏ.எல். மீராசாஹிப், ஜெயந்தியாய அஹமட் ஹிராஸ் வித்தியாலய அதிபர் எம்.ஐ. ஜெயினுலாப்தீன், ஓய்வு நிலை தபாலதிபர் எம்.ஐ.இல்யாஸ், சட்டத்தரணி ஐ.ஏ.ரஸ்மி, வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை அதிபர் ஏ.எம்.எம்.தாஹிர், எழுத்தாளரும் ஊடகவியலாளருமான எஸ்.எம்.எம். முர்ஷித் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது நூலாய்வுரையை பேராசிரியர் எஸ்.யோகராசா நிகழ்த்தினார்.

நூலின் முதற் பிரதியை நூலாசிரியர் ஆ.லெ.மு.இர்ஷாத் பேராசிரியருக்கு வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் பாடசாலைகளின் அதிபர்கள், பிரதேச இலக்கியவாதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.





# துறைசார்ந்த பெண்களுக்கு கௌரவம்







**மீனோடைக்கட்டு செய்தியாளர்**

திருகோணமலை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட துறைசார்ந்த 160 பெண்களை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு திருகோணமலை நகரசபை மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி எவ்.எம்.சரிக் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜீ.திசாநாயக்க பிரதம அத்தியாகக் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

சமூகசேவை, கல்வி, மருத்துவம், விளையாட்டு, சுற்றுலாத்துறை, அழகியல் துறை, கலை, கலாசாரம், அரச மற்றும் அரச சார்பற்ற தொழிற்றுறை சார்ந்த பெண்கள் இதன்போது பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

# உலக தடகளத்தில் இந்தியா

## தங்கம் வென்ற முதல் இந்தியரானார் நீரஜ்







ஹங்கேரியின் புடபெஸ்டில் நடைபெற்ற உலக தடகள சம்பியன்ஷிப் போட்டியில் ஆடவருக்கான ஈட்டி எறிதல் இறுதிப் போட்டியில் நீரஜ் சோப்ரா 88.17 மீ.தூரம் எறிந்து இந்தியாவின் முதல் தங்கப் பதக்கத்தை வென்றார். 2022 ஆம் ஆண்டு உலக சம்பியன் ஷிப்பில் வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றவர்.

ஹரியானாவைச் சேர்ந்த 25 வயதான இவர், ஏற்கனவே 2020 ஒலிம்பிக் சம்பியன் ஆவார்.ஆசிய விளையாட்டு 2018, காமன் வெல்த் விளையாட்டு 2018, டைமன் லீக் 2022, ஏசியன் ஷம்பியன் ஷிப் 2017,சயுத் ஏசியா கேம் 2016 ஆகிய போட்டிகளில் தங்கம் வென்றவர்.

உலக தடகள சம்பியன்ஷிப் ஈட்டி எறிதல் இறுதிப் போட்டியில் நீரஜ் சோப்ரா, டிபி மனு, கிஷோர் ஜென ஆகிய மூன்று இந்திய வீரர்கள் உட்பட 12 வீரர்கள் போட்டியிட்டனர்.

நீரஜ் சோப்ரா தனது இரண்டாவது முயற்சியில் 88.17 மீற்றர் தூரத்தை எறிந்து போட்டி முழுவதும் தனது ஆதிக்கத்தை உறுதிப்படுத்தினார்.

வலுவான போட்டியாளரான பாகிஸ்தானின் அர்ஷத் நதீம் வெள்ளிப் பதக்கமும், செக். குடியரசின் ஜாகுப் வாட்லெஜ் வெண்கலப் பதக்கமும் பெற்றனர்.

உலக தடகள சம்பியன்ஷிப் 4X400 மீற்றர் ஓட்டத்தில் இந்திய அணி ஐந்தாவது இடத்தைப் பிடித்தது.




இந்திய அணியில் அமோஜ் ஜேக்கப், ராஜேஷ் ரமேஷ், முகமது அனஸ் யாஹியா, முகமது அஜ்மல் வரியத்தொடி ஆகியோர் கலந்து கொண்டனர். இந்தப் போட்டியை இந்திய அணி 2 நிமிடம் 59.92 விநாடிகளில் நிறைவு செய்து 5 ஆவது இடத்தைப் பிடித்தது.

4X400 மீற்றர் தொடர் ஓட்டப் பந்தயத் தின் தகுதிச் சுற்றில் இந்திய அணி சிறப்பாகச் செயற்பட்டது. இந்திய வீரர்கள் வரலாறு படைத்து முதல் முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறினர். இந்தத் தகுதிச்சுற்றில் இந்திய அணி 2 நிமிடம் 59.05 விநாடிகளை எடுத்தது. இதன்மூலம், இந்திய அணி ஆசிய சாதனையை முறியடித்துள்ளது. ஆசியாவின் முந்தைய சாதனை 2 நிமிடம் 59.51 விநாடிகள் ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.

உலக தடகள சம்பியன் ஷிப்பில் பெண்களுக் கான 3,000 மீற்றர் ஸ்டீபிள் சேஸ் இறுதிப் போட்டியில் இந்தியாவின் பருல் சவுத்ரி 9:15.31 விநாடிகளில் கடந்து 11ஆவது இடத்தைப் பிடித்தார்.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

## டில்சான் மதுசங்கவும் அவுட்

ஏ. அகீல் சிஹாப்




ஆசியக்கிண்ண கிரிக் கெட் தொடருக்கான இலங்கை அணியின் குழாமில் இருந்து இளம் வேகப்பந்து வீச்சாளர் டில்சான் மதுசங்க நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக மற்றுமொரு இடது கை வேகப்பந்து வீச்சாளரான பினுர பெர்னாண்டோ அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே முன்னணி வேகப்பந்துவீச்சாளர் களான துஷ்மந்த சமீர, லஹிரு குமார மற்றும் சுழல் பந்துவீச்சு சகலதுறை வீரர் வனிந்து ஹஸரங்க, குசல் பெரேரா ஆகியோர் உபாதைகள் காரணமாக வெளியேறியுள்ளனர். இந்த வரிசையில் தற்போது டில்சான் மதுசங்க இடம்பிடித்துள்ளார்.

இதேவேளை, மேலதிக வீரர்களாக நுவான் துஷார மற்றும் சகலதுறை வீரர் சாமிக்க கருணாரத்ன ஆகி யோர் அணியில் இணைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை தங்களுடைய முதல் போட்டியில் பங்களாதேஷ் அணியை எதிர்வரும் வியாழக்கிழமை எதிர்கொள்கிறது.

## 47ஆவது தேசிய விளையாட்டு விழா கோலாகலமாக நிறைவு

## மீண்டும் சம்பியனானது மேல் மாகாணம்

## கடைசி இரு இடங்களைப் பிடித்த வடக்கு, கிழக்கு

ஏ. அகீல் சிஹாப்





47ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகள் கடந்த சனிக்கிழமை கோலாகலமாக நிறைவுக்கு வந்தன. இதில் தேசிய விளையாட்டு விழா வரலாற்றில் தமது ஆதிக்கத்தைத் தொடர்ந்து நிலைநாட்டி வருகின்ற மேல்மாகாணம், இம்முறை தேசிய விளையாட்டுப் போட்டிகளிலும் ஒட்டுமொத்த சம்பியன் பட்டத்தை வென்றது.

இதில் 115 தங்கம், 78 வெள்ளி மற்றும் 89 வெண்கலப் பதக்கங்களை வென்று மேல்மாகாணம் முதலிடத்தைப் பெற்றுக்கொள்ள, 39 தங்கம், 45 வெள்ளி, 50 வெண்கலப் பதக்கங்களை வென்ற மத்திய மாகாணம் 2ஆவது இடத்தையும், 30 தங்கம், 37 வெள்ளி மற்றும் 45 வெண்கலப் பதக்கங்களை வென்ற தென்மாகாணம் 3ஆவது இடத்தையும் பெற்றுக்கொண்டன.

இந்நிலையில், 7 தங்கம், 9 வெள்ளி மற்றும் 8 வெண்கலப் பதக்கங்களை வென்ற கிழக்கு மாகாணம் 8ஆவது இடத்தைப் பெற்றுக்கொண்டதுடன், 5 தங்கம், 9 வெள்ளி மற்றும் 2 வெண்கலப் பதக்கங்களை வென்ற வட மாகாணம் இம்முறையும் கடைசி இடத்தைப் பிடித்தது.

இம்முறை தேசிய விளையாட்டுப் போட்டிகளில் ஆண்டின் அதி சிறந்த மெய்வல்லுனர் வீரருக்கான விருதை மத்திய மாகாணத்தைச் சேர்ந்த 400 மீற்றர் சட்டவேலி ஓட்ட வீரர் (50.59 செக்.) தனுக தர்ஷன தட்டிச் செல்ல, ஆண்டின் அதி சிறந்த மெய்வல்லுனர் வீராங்கனைக்கான விருதை தென்மாகாணத்தைச் சேர்ந்த 400 மீற்றர் ஓட்ட வீராங்கனை (52.80 செக்.) நதீஷா ராமநாயக்க பெற்றுக்கொண்டார்.

தேசிய விளையாட்டுப் போட்டிகளின் மெய்வல்லுனர் நிகழ்ச்சியில் 5 புதிய போட்டிச் சாதனைகள் முறியடிக்கப்பட்டன. பரிசளிப்பு வைபவம் மற்றும் நிறைவு விழா வைபவத்திற்கு பிரதம அதிதியாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ கலந்து கொண்டதுடன், வெற்றிக் கேடயங்களையும் பரிசில்களையும் வழங்கி வைத்தார்.




## ஆசியாவில் தங்கம் வென்ற இலங்கைக்கு உலகில் கடைசி இடம்

ஏ. அகீல் சிஹாப்

ஹங்கேரியில் நடைபெற்ற 2023 உலக மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரில் ஆண்களுக்கான 4X400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் இலங்கை அணி கடைசி இடத்தைப் பெற்றது.

கடந்த சனிக்கிழமை (26) நடைபெற்ற இரண்டாவது தகுதிகாண் போட்டியில் பங்குபற்றிய இலங்கை, போட்டியை 3 நிமிடங்கள் 3.25 செக்கன்களில் நிறைவு செய்து கடைசி இடத்தைப் பெற்றது. இதனால் 17 அணிகளுக்கான ஒட்டுமொத்த நிலையிலும் கடைசி இடத்தைப் பெற்றது.

இலங்கை தொடர் ஓட்ட அணியில் அருண தர்ஷன, ராஜித்த ராஜகருண, பபாசர நிக்கு, காலிங்க குமாரகே ஆகியோர் இடம்பெற்றனர். ஆசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்ற இலங்கை அணியினர் புடாபெஸ்டில் குறைந்த ஆற்றலையே வெளிப்படுத்தினர்.

## இறுதி அணியாக அரையிறுதிக்குள் நுழைந்த சென். பீட்டர்ஸ்

ஏ. அகீல் சிஹாப்

டயலொக் பாடசாலை ரக்பி நொக்அவுட் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நான்காவது காலிறுதி ஆட்டத்தில் ட்ரினிட்டி கல்லூரியை வீழ்த்திய சென். பீட்டர்ஸ் கல்லூரி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

அரையிறுதிப் போட்டிக்கு நடப்புச் சம்பியனான இசிப்பத்தான கல்லூரி நேரடியாகத் தகுதிபெற்றது. அதனைத் தொடர்ந்து சாஹிரா கல்லூரியும், புனித ஜோசப் கல்லூரியும் அரையிறுதிக்குத் தகுதி பெற்றன. இறுதியாக நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் ட்ரினிட்டி கல்லூரியை 25 - 13 என்ற புள்ளிகள் கணக்கில் வீழ்த்திய சென். பீட்டர்ஸ் கல்லூரி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

அதன்படி முதல் அரையிறுதி ஆட்டத்தில் இஸிப்பத்தான - சாஹிரா கல்லூரிகளும், இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் சென். பீட்டர்ஸ் - சென். ஜோசப் அணிகளும் பலப்பரீட்சை நடத்துகின்றன. மாபெரும் இறுதிப் போட்டி செப்டெம்பர் 10ஆம் திகதியன்றும் கொழும்பு ரோயல் கல்லூரி விளையாட்டு மைதானத்திலும் நடைபெறும்.

## நேற்று ஆரம்பமானது யு.எஸ். ஓபன்

us open

ஆண்டின் கடைசி கிராண்ட்ஸ்லாமான 143 ஆவது அமெரிக்க ஓபன் டென்னிஸ் (யு.எஸ். ஓபன்) தொடர் நியூயோர்க் நகரில் நேற்று ஆரம்பமாகி எதிர்வரும் 10ஆம் திகதி வரை நடக்கிறது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் உலகின் நம்பர் வன் வீரரும், நடப்பு சம்பியனுமான கார்லஸ் அல்காரஸூக்கும் (ஸ்பெயின்), 2 ஆம் நிலை வீரர் நோவக் ஜோகோவிச்சுக்கும் (செர்பியா) இடையேதான் நேரடி போட்டி நிலவுகிறது. கொரோனா தடுப்பூசி போட்டுக்கொள்ளாததால் கடந்த முறை அமெரிக்காவில் நுழைய அனுமதி மறுக்கப்பட்ட ஜோகோவிச் 2 ஆண்டுக்குப் பிறகு இந்தப் போட்டியில் களம் காணுகிறார்.

கணிப்புப்படி எல்லாம் சரியாக நகர்ந்தால் இறுதி ஆட்டத்தில் ஜோகோவிச்சும், அல்காரஸும் நேருக்கு நேர் மோதலாம். போட்டிக்கான மொத்த பரிசுத்தொகை ரூ.536 கோடியாகும். கடந்த ஆண்டை விட இது 8 சதவீதம் அதிகமாகும்.

## ஆசியக்கிண்ண தொடருக்கான ஆப்கான் குழாம் அறிவிப்பு




ஆசியக்கிண்ணத் தொடருக்கான 17 பேர் அடங்கிய ஆப்கானிஸ்தான் குழாம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹஸ்மத்துல்லா சஹிதி தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ள ஆசியக் கிண்ணத்திற்கான ஆப்கான் அணி பாகிஸ்தானுக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் ஆடியிருந்த பரீட் அஹ்மட், சஹிதுல்லாஹ் கமால் மற்றும் அஷ்மத்துல்லா ஒமர்சாய் ஆகியோருக்கு ஓய்வு வழங்கியிருக்கின்றது.

ஆப்கான் அணிக்காக இறுதியாக ஆறு வருடங்களின் முன்னர் ஒருநாள் போட்டியொன்றில் ஆடியிருந்த சகலதுறை வீரர் கரீம் ஜனாட்டிற்கும் ஒருநாள் ஆசியக்கிண்ண அணியில் வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.

ஆப்கானிஸ்தான் அணி செப்டெம்பர் 3ஆம் திகதி தமது முதல் போட்டியில் பங்களாதேஷ் அணியை லாஹூர் மைதானத்தில் எதிர்கொள்கிறது.

ஆசியக் கிண்ண குழாம்

ஹஷ்மத்துல்லா சஹிதி (அணித்தலைவர்), ரஹ்மானுல்லா குர்பாஸ், இப்ராஹிம் சத்ரான், ரியாஸ் ஹஸ்ஸன், ரஹ்மத் சாஹ், நஜிபுல்லா சத்ரான், மொஹமட் நபி, இக்ராம் அலிகில், ரஷீட் கான், குல்படின் நயீப், கரீம் ஜனாட், அப்துல் ரஹ்மான், ஷரபுத்தின் அஷ்ரப், முஜிபுர் ரஹ்மான், நூர் அஹ்மட், மொஹமட் சலீம், பசால்ஹக் பரூக்கி

Dialog
SCHOOLS
RUGBY
KNOCKOUTS

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7